JESUS NEVER FAILS
DIVINE GOOD NEWS CENTER

# ஜீவ மன்னா



## அனுதினமும்

2017 ஜனவரி

64 வது வெளியீடு

உங்கள் அனைவருக்கும்
மகிழ்ச்சிகரமான
புத்தாண்டு வாழ்த்துக்கள்!

"உன் தேவனாகிய கர்த்தர் விசாரிக்கிற தேசம்,
வருஷத்தின் துவக்கமுதல் வருஷத்தின் முடிவுமட்டும்
எப்பொழுதும் உன் தேவனாகிய கர்த்தரின் கண்கள்
அதின்மேல் வைக்கப்பட்டிருக்கும்." உபாகமம் 11:12

அட்டைப் படத்தின் கதை உட்புறத்தில்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# அன்பார்ந்த தேவ பிள்ளைகளே!

ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் நன்மைகளினால் மூடிசூட்டப்பட்ட வருடமாகட்டுமென வாழ்த்துகின்றோம். வருடமொன்று முடிவடைந்து புது வருடம் உதயமாவதும் எமது சிருஷ்டிப்பின் தேவனான பிதாவானவரின் கட்டளையின்படியே ஆகும். தேவன் பிறப்பித்த கட்டளையின்படி நாள், கிழமை, மாதம் என்பன முடிவடைந்து புது வருடமொன்று உதயமாகின்றது. அதை யாராலும் தடை செய்ய முடியாது.



தேவ பிள்ளைகளே! புது வருடமொன்றைப் பிறப்பித்து அந்த வருடத்தின் இறுதிவரை நாம் கடந்து செல்ல எமக்கு அநுக்கிரகம் அளிப்பது எம்மைச் சிருஷ்டித்த பரலோக பிதாவானவரே. ஆகையால் உதயமான 2017ம் புது வருடத்தில் அவரது பிள்ளைகளான நம் அனைவருக்கும் நன்மைகள் நிகழுமே தவிர தீமைகள் ஒரு போதும் எம்மை அணுகாது.

இம்முறை 64வது ஜீவ மன்னா தின மஞ்சரியின் அட்டைப்படத்தில் காணப்படுவது மிகவும் செழிப்பாக வளர்ந்திருக்கும் பசுமை நிறைந்த வயல் வெளியாகும். அப்படியே சூரியன் உதயமாகும் காட்சியும் மிக அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளது. அங்கே காணப்படும் தேவ வசனத்தில் '... உன் தேவனாகிய கர்த்தர் விசாரிக்கிற தேசம் வருஷத்தின் துவக்க முதல் வருஷத்தின் முடிவு மட்டும் எப்பொழுதும் உன் தேவனாகிய கர்த்தரின் கண்கள் அதின் மேல் வைக்கப்பட்டிருக்கும்' என்று கூறப்படுகின்றது. (உபாகமம் 11:12) அதன் கருத்து தேசம் செழிப்பைப் பெறுவது எமது தேவனாலே என்றாகும். ஏனென்றால் ஏற்ற காலத்தில் தேசத்தில் மழையைப் பெய்வித்து செழிப்பை உருவாக்குவது நம்மைச் சிருஷ்டித்த தேவனே. அறுவடை மிகுதியாகும்படியாக பெருந்தொகை பணத்தில் தரமான உரங்களைப் பாவித்தாலும், தேவையான மழை ஏற்ற நேரத்தில் பெய்யாது போனால் வயலில் நெற்கதிர்கள் அழிந்து போய் விடும்.



☞ அட்டைப்படத்தின் உட்புறத்தில் பார்க்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிமை! மகா பரிசுத்த தேவனுக்கே

## ஆசிரியர் உரை

## புதிய வருடத்தில் புது பெலனைப் பெறுங்கள்!

கிறிஸ்துவுக்குள் அன்பான தேவ பிள்ளைகளே.

ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் எனது அன்பின் வாழ்த்துக்கள். உதயமாகிய 2017ம் ஆண்டு உங்களுக்கு மகிழ்ச்சிகரமான வருடமாகட்டும் என வாழ்த்துகின்றேன். கடந்த வருடம் முழுவதுமாக மிகவும் பிரியமுடனும், உற்சாகத்துடனும், மிக ஆவலுடனும் ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு நாளும் இந்த ஜீவ மன்னா தின மஞ்சரியை வாசித்து அதன் மூலமாக நீங்கள் வேண்டிய அளவு ஆத்மீக போசனையை பெற்றுக் கொண்டீர்களா? 2017ம் ஆண்டு இப் புதிய வருடத்தில் இம்மாதந் தொடங்கி வருட இறுதிவரை மாதந்தோறும் ஜீவ மன்னா தின மஞ்சரிக்கூடாக உங்கள் ஆத்துமாவானது மென்மேலும் பெலன் பெற்று செழிப்புற தேவனின் கருணையை பெற்று சுகமாய் வாழ வாழ்த்துகின்றேன்.

2016ம் வருடம் முடிவடைந்து 2017ம் ஆண்டு ஆரம்பத்தில் இருக்கும் நீங்கள் இவ் வருடத்திற்குள் புதிதான காரியங்களைச் செய்ய வேண்டுமென்ற எதிர்பார்ப்புடன் இருக்கின்றீர்களா? நாளுக்கு நாள் அழிவுப் பாதையை நோக்கிச் செல்லும் உலக மனிதனின் இரட்சிப்பிற்காக நீங்கள் செய்ய விரும்பும் காரியங்களை நிறைவேற்றிட தேவன் உங்களோடிருந்து உதவி செய்கிறார் என்பதை முழு உள்ளத்தோடு விசுவாசியுங்கள். நீங்கள் சத்தியத்தை அறிந்து கொண்டதைப் போன்று அவர்களும் தேவனின் சத்தியத்தை அறிந்துக் கொண்டு வாழ்வை அமைத்துக் கொள்ள தீவிரமாய்ச் செயல்படுங்கள்.

தேவ பிள்ளைகளே! தேவனின் வசனங் கூறுகின்றது சங்கீதம் 1:2இல் கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். நீங்கள் தினமும் வேத வசனத்தை வாசித்து தியானிப்பீர்களாயின் உங்கள் வாழ்வு ஏற்ற காலத்தில் கனி கொடுக்கும் செழிப்பான மரமாக உயர்ந்திருக்கும் 2017ம் வருடம் முழுவதும் ஆத்மீக பலன்கள் உங்கள் வாழ்வை அலங்கரிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

## உளமார்ந்த புது வருட வாழ்த்துக்கள்!

**கடந்து வந்த 2016ம் நல் வருடத்தில்!**
**களிப்போடு வாழ்ந்தோம் தேவ கிருபையால்!**
**கற்றறிந்தோம் வசனங்களை ஜீவ மன்னாவில்!**
**கன்மலையில் வாழ்ந்திடுவோம் புதிய வருடத்தில்!**

இப்படிக்கு
**இயேசு கிறிஸ்துவுக்குள்**
போதகர் ஏ.ஜே.ஜோசப்
**இயேசு கைவிடார் சுவிஷேசப் பணியகம்**

**மன்னா வாசகர்களே TM இலக்கத்தை அனுப்ப மறந்துவிட வேண்டாம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜனவரி

01 ஞாயிறு

உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

## கர்த்தரின் கிரியைகளை தடை செய்பவர் யார்?

வேதவாசிப்பு

2 சாமுவேல் அதி: 19-20

**"நாங்களோ ஜெபம்பண்ணுவதிலும் தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம் என்றார்கள்."** (அப்போஸ்தலர் 6:4)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் பிறந்த இவ்வருடம் முழுவதுமாக பரலோக தேவ பிதாவின் ஆசீர்வாதங்கள் உங்களுக்குச் சொந்தமாகும்படியாக வாழ்த்துகிறேன்.** மேலே கூறப்பட்ட தேவ வசனத்தில் எழுதப்பட்டிருப்பதைப் போன்று உதயமாகும் ஒவ்வொரு நாளும் நம் தேவனுக்கே சொந்தம் என்பதால் **365 நாட்களும் உங்களைக் குறித்து கரிசனையுடையவராய் கிரியை செய்கின்றார்.** ஆகையால் **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பாக!**

தேவ பிள்ளைகளே! தேவனின் கிரியைகளை உலக மனிதர்களின் செயல்களோடு ஒப்பிட்டுப் பார்க்க முடியாது. ஏனென்றால் **தேவன் நம்மை சிருஷ்டித்தவராவார். வானத்தையும், பூமியையும் இங்கு காணப்படும் அனைத்தையும் படைத்து ஆளுகை செய்வதும் தேவனேயாவார் பூமியும் அங்கு காணப்படும் யாவையும் எனின் மரங்கள், புல்பூண்டு கனிதரும் மரங்கள், விருட்சங்கள், நதிகள், நீரோடைகள், சமுத்திரம், மச்சங்கள், நீரில் வாழும் ஜந்துக்கள், சிறகுள்ளபட்சிகள், மிருக ஜீவன்கள், பூமியனைத்தையும், ஊரும் சகல பிராணிகள், என்பவைகளும், மனிதர்களும் அல்லவா?** தேவ பிள்ளைகளே! தேவன் எவ்வளவு வல்லமையானவர் என்பதை அறிவீர்களா? ஆகாயத்தில் பிரகாசிக்கின்ற சூரியன் உலகெங்கும் எல்லா நாடுகளுக்கும் ஒளியைக் கொடுப்பதோடு அதன் கிரியைகளான உதயமாகுதலையும் மறைவதையும் அறிந்து இடையறாது செயல்படுகின்றது. நேரங்கள் வித்தியாசப்பட்டாலும் எல்லா நாடுகளுக்கும் அதன் ஒளியைக் கொடுப்பதில் எந்தவித பாகுபாடின்றியும் மறவாமலும் கிரியை செய்கின்றது.

தேவ பிள்ளைகளே! **தேவனது சாயலாகவும் ரூபத்தின்படியேயும் சிருஷ்டிக்கப்பட்ட மனிதர்களாகிய எமக்கு அவரது திட்டங்கள் ஏன் உடனடியாக நிறைவேறுவதில்லை என நினைக்கின்றீர்களா? உங்களைக் குறித்து தேவன் வைத்திருக்கின்ற திட்டங்கள், யோசனைகள் ஏற்ற நேரத்தில் நிறைவேற்றுவதில் தீவிரமாக செயல்படுவார்.** இன்றும் உங்கள் வாழ்வில் நன்மையான காரியங்களை வாய்க்கப் பண்ணிக் கொண்டிருக்கிறார். தேவன் அவரது சிருஷ்டிப்புக்களுக்கூடாக மகிமைப்படுத்தப்படுகின்றார். அவரின் உயர்ந்த படைப்பான மனிதர்களாகிய எமது வாழ்விலும் தேவனின் கிரியைகள் மகிமைப்படுத்தப்படவும், கௌரவப்படுத்தப்படவும் வேண்டும் அல்லவா? **தேவன் இன்றும் உங்கள் வாழ்வில் விஷேசித்தமானவைகளைச் செய்துக் கொண்டிருக்கிறார் என விசுவாசியுங்கள். தேவனது காரியங்களை தடை செய்யவோ அவர் செய்வது என்ன? என்று கேட்கவோ யாராலும் முடியாது. 2017ம் வருடம் முழுவதுமாக உங்களை தீமைகள் அணுகாது காத்து வழி நடத்த வேண்டுமென பிரார்த்திக்கின்றேன். ஆசீர்வாதமான நாள்!**

ஜெபம்

கிருபை நிறைந்த தேவனே! நீங்கள் முழு உலகத்தையும் இங்கு காணப்படும் யாவற்றையும் உருவாக்கிய சிருஷ்டிப்பின் தேவனானவர் உங்களால் செய்ய முடியாதது என்று ஒன்றுமே இல்லையென்பதால் ஸ்தோத்தரிக்கின்றேன். உங்கள் வல்லமையான காரியங்களை என்னிலும் வெளிப்படுத்தி உங்கள் நாமத்தை மகிமைப்படுத்தும்படியாக இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"வானத்திலும் பூமியிலும், சமுத்திரங்களிலும், எல்லா ஆழங்களிலும், கர்த்தர் தமக்குச் சித்தமானதையெல்லாம் செய்கிறார்." (சங்கீதம் 135:6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜனவரி

02 திங்கள்

**தேவ கிருபையின் ஐசுவரியத்தின்படியே மீட்பைப் பெற்றோம்!**

வேதவாசிப்பு

2 சாமுவேல் அதி: 21–22

**"அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது."** (எபேசியர் 1:7)

ஒருவராய் சர்வ வல்லமையுள்ளவரும் சேரக்கூடாத ஒளியின் வாசம் பண்ணுகிறவரும் மனுஷரில் ஒருவரும் கண்டிராதவருமான ஜீவனுள்ள **இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் என் அன்பான தேவ பிள்ளைகளே உங்களை வாழ்த்துகின்றேன். 1 யோவான் 4:8** இல் "**தேவன் அன்பாகவே இருக்கிறார்**" என்று எழுதப்பட்டுள்ளது. தேவனைக் குறித்து அறிந்து அவரது அன்பை ருசித்துப் பார்க்கும் **உங்களைப் போல இன்னுமொரு அதிர்ஷ்டசாலி இவ்வுலகில் இருப்பாரா என்று நானறியேன்.** நீங்கள் மாத்திரமல்ல தேவனை அறிந்துக் கொண்ட நீங்கள் நான் உட்பட அனைவரும் உண்மையிலேயே **மிக அதிர்ஷ்டக்காரர்களாவோம்**!

தேவ பிள்ளைகளே! **தேவன் எங்களை எவ்வளவாக நேசிக்கின்றார்? எனக் காண்பித்தது அவர் தனது சொந்த ஒரே பேறான திருக்குமாரனை உலகிற்கு அனுப்பிய அதியுன்னத செயலிலேயே ஆகும். அன்று தேவ குமாரன் மனு உருவில் உலகிற்கு வருகை தந்து 33½ சுமார் வருடங்கள் இப்பூமியில் ஜீவித்தார்.** இயேசுகிறிஸ்துவுக்கு 30வது வயதில் சகரியாவின் புத்திரனான யோவான் தீர்க்கதரிசியிடம் ஜோர்தானில் ஜலத்தில் ஞானஸ்நானம் பெற்று பரிசுத்த ஆவியானவரையும் பெற்று **தேவ இராஜ்யத்தைக் குறித்தும், தேவனைக் குறித்தும் பிரசங்கிக்கத் தொடங்கினார்.** அதன் பிறகு தேவனின் சித்தத்தின்படி உலகில் அனைத்து மனிதர்களின் பாவங்களுக்காக **சிலுவையில் பலியானார்.**

தேவ பிள்ளைகளே! எங்கள் பாவங்கள் காரணமாக இயேசுகிறிஸ்து அவரது சரீரத்தில் கடைசி இரத்தத்துளி வரையும் சிந்தி எங்கள் பாவங்களுக்கு மன்னிப்பைப் பெற்றுத் தந்தார். **பரி.யோவான் 19:34**இல் "**போர்ச் சேவகர்களில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான். உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது**" என்றெழுதப்பட்டுள்ளது. மேலே **எபேசியர் 1:7**இல் குறிப்பிட்டுள்ளதென்னவென்றால் "**அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது**" என்றாகும். எங்கள் அன்பான இயேசுகிறிஸ்து அன்று சிலுவையில் உலகில் அனைத்து பாவிகளுக்காகவும் தனது சரீரத்திலுள்ள இரத்தத்தை சிந்தியதன் நிமித்தம் இன்றும் **தேவனை ஏற்றுக் கொள்கின்ற அனைவரும் அவர்களது சகல பாவங்களுக்கும் மன்னிப்பைப் பெறுகின்றார்கள்.** தண்டனையை அல்ல மன்னிப்புப் பெற்று இயேசுகிறிஸ்துவுக்குள் நீங்களும் வெற்றி பெறுங்கள். **வெற்றிகரமான நாள்**!

ஜெபம்

என் தேவனே உங்கள் குமாரனுக்கூடாக உங்கள் அன்பை எனக்குக் காட்டியபடியால் உங்களை ஸ்தோத்தரிக்கின்றேன். தேவன் தனது இரத்தத்திற்கூடாக எனது தவறுகளுக்கு மன்னிப்பு பெற்றுத் தருகின்றபடியால் எனது வாழ்வினை மீண்டுமாக புதிதாக்கி என்னை புதிதாக சிருஷ்டிப்பதினால் ஸ்தோத்தரிக்கின்றேன். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின." (2 கொரிந்தியர் 5:17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜனவரி

03 செவ்வாய்

உங்கள்
ஜீவ கிரீடத்தை
பாதுகாத்துக்
கொள்ளுங்கள்!

வேதவாசிப்பு

2 சாமுவேல்
அதி: 23-24

**"இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு."** (வெளிப்படுத்தல் 3:11)

இயேசுவுக்குள் பிரியமான என் அன்பு தேவ பிள்ளைகளே! **தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார் என இன்றைய நாளில் வாழ்த்துகின்றேன்.** சுமார் இரண்டு கோடியே மூன்று இலட்சம் பேர் வாழ்கின்ற இலங்கையரின் மத்தியில் நம்மை பரலோக தேவனின் சொந்தப் பிள்ளைகளாக தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ளதால் நீங்களும் **நானும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாவோம்**!

தேவ பிள்ளைகளே! **எங்களைத் தேர்ந்தெடுத்த தேவ பிதாவானவர் எங்கள் ஜீவியத்திற்கு அவசியமான பூமிக்குரிய ஆசீர்வாதங்களால் மாத்திரமல்ல எங்கள் ஆத்துமாவையும் ஆசீர்வதிக்கின்றார்.** பரலோக இராஜ்யத்தில் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளும்படியாகவும், ஜீவ கிரீடத்தை எமக்கு உரிமையாகக் கொடுக்கும்படியாகவும் தேவ பிதாவானவர் எப்பொழுதும் வழியைக் காட்டி எங்கள் ஆத்துமாவை காத்துக் கொள்வார். மேலே கூறப்பட்ட **வெளிப்படுத்தல் 3:11**இல் **"இதோ சீக்கிரமாய் வருகிறேன் ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக் கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக் கொண்டிரு"** என கூறப்பட்டுள்ளது. **எங்கள் இரட்சகர் இயேசுகிறிஸ்து மரணத்தை வென்று உயிர்த்தெழுந்ததன் பின்பு 40 நாட்களுக்கிடையில் தனது சீஷர்களுக்கு தரிசனமாகி தேவ இராஜ்யத்தைக் குறித்தும் கூறி அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே தேவன் ஜீவனுள்ளவராக இருக்கின்றார் என்பதை உறுதிப்படுத்தினார்.** அதன் பிறகு இயேசுகிறிஸ்து பரலோகத்திற்கு உயர எடுத்துக் கொள்ளப்பட்டார்.

தேவ பிள்ளைகளே! இயேசுகிறிஸ்து பரலோகத்திற்கு எழுந்தருளி போகும் போது சீஷர்கள் பரலோகத்தை அண்ணாந்து பார்த்து கொண்டிருக்கையில் **இதோ வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டு பேர் அவர்கள் அருகே நின்று கலிலேய மனுஷரே நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? "உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுகிறிஸ்துவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்"** என்பதை **அப்போஸ்தலர் 1:10,11**இல் காண்கிறோம். **பரி.மத்தேயு 24:44**இல் **"நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார் ஆதலால் நீங்கள் ஆயத்தமாயிருங்கள்" என கூறப்படுகின்றது. ஆகையால் நீங்களும் ஜீவ கிரீடத்தை பாதுகாத்துக் கொண்டு இயேசுவின் இரகசிய வருகையின் போது அவரோடு செல்ல ஆயத்தமாயிருங்கள். வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் இயேசுவே! நீங்கள் உங்கள் குமாரனுக்கூடாக என்னை உங்கள் சொந்த பிள்ளையாக்கிக் கொண்டது பூமிக்குரிய ஆசீர்வாதங்களினால் மட்டுமல்ல, நித்திய ஜீவனைப் பெறவும் என்றறிந்துக் கொண்டேன். தேவனே உம் வசனத்தின்படி வாழ உதவி செய்யுங்கள். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். -ஆமென்-

வேத வாக்குத்தத்தம்

"அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர்தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்."
(பரி.மத்தேயு 24:36)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆபத்துக்காலத்தில் உங்கள் இருதயத்தை தைரியப்படுத்திக் கொள்ளுங்கள்!**



**"ஆபத்துக்காலத்தில் நீ சோர்ந்து போவாயானால், உன் பெலன் குறுகினது."** (நீதிமொழிகள் 24:10)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் உங்கள் வாழ்வில் தீமைகளை நன்மைகளாக மாற்றும் தேவனே இன்றைய நாளில் ஆளுகை செய்யுமாறு பிரார்த்திக்கின்றேன்.** அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்குச் **சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்** என **ரோமர் 8:28**இல் எழுதப்பட்டுள்ளமையால் **நீங்கள் கலங்காதிருங்கள்!**

தேவ பிள்ளைகளே! தேவ வசனத்தில் ஆபத்தைக் குறித்து கூறுவது ஏன்? என நீங்கள் நினைக்கலாம் ஆனாலும் **"உன்னதமானவருடைய வாயிலிருந்து தீமையும், நன்மையும் புறப்படுகிறதில்லையோ என்றும் உயிருள்ள மனிதன் முறையிடுவானேன்? அவன் தன் பாவத்துக்கு வரும் தண்டனையைக் குறித்து முறையிடுகிறதென்ன?'** என **புலம்பல் 3:38,39**இல் எழுதப்பட்டுள்ளது. **மனிதனுடைய அனைத்து பாவங்களுக்கும் விலைக்கிரயம் செலுத்திய எங்கள் இரட்சகர் இயேசுகிறிஸ்துவின் பேரில் விசுவாசங் கொண்ட உங்கள் அனைவருக்கும் பாவ மன்னிப்பு உண்டு.** அப்படியானால் **'உங்கள் அனைவரினதும் பாவங்கள் மன்னிக்கப்பட்டுள்ளதோடு நீங்கள் விடுதலை பெற்றுள்ளீர்கள்.'** ஆகையால் பாவங்களுக்கு பெற வேண்டிய தண்டனையிலிருந்து நீங்கள் அனைவரும் விடுதலையாகியுள்ளீர்கள். ஆனாலும் உலகத்தவர்கள் அப்படியில்லாதபடியினால் இன்னும் பாவத்திற்கு தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனாலும் தேவனின் பிள்ளைகளாகிய எமக்கு ஆபத்து நேரிடுவது ஏன்? **"நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான், துன்மார்க்கரோ தீங்கிலே இடறுண்டு கிடப்பார்கள்"** என்று. **நீதிமொழிகள் 24:16**இல் எழுதப்பட்டுள்ளது. அதில் கூறப்படுவது நீதிமானுக்கும் ஆபத்து ஏற்படும் என்றல்லவா? ஆனாலும் **நீங்கள் கலங்காதிருங்கள்!** ஆபத்தின் நடுவில் தேவன் இடைபட்டு உங்களோடிருப்பார்.

தேவ பிள்ளைகளே! பரிசுத்த வேதாகமத்தில் **பரி.யோவான் 10:10**இல் இவ்வண்ணமாக எழுதப்பட்டுள்ளது. **"திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவனுண்டாயிருக்கவும் அதுபரிபூரணப்படவும் வந்தேன்.'** இதில் திருடன் எனக் கூறுவது **ஆத்துமாவை அழிக்கும் சாத்தானை ஆகும்.** இயேசுகிறிஸ்துவினால் ஜீவனைப் பெற அழைக்கப்பட்ட எம்மை நித்திய ஜீவனுக்கு உரிமையற்றவர்களாக்கி ஆபத்துக்களை வரப்பண்ணுவார். ஆனாலும் நமது தேவன் நம்மோடிருந்து எம்மைக் காப்பாற்றுவார். **இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து மீட்பைப் பெறுங்கள். வெற்றிச் சிறந்த நாள்!**

**ஜெபம்**

மகா இரக்கம் நிறைந்தவரே! உலகத்தவர்கள் ஆபத்துக்களின் போது வீழ்ந்து விடுவார்கள். ஆனாலும் தேவனின் பிள்ளைகளான எமக்கும் ஆபத்து ஏற்படுகின்ற போது நீங்களே எமது பாதுகாப்பு என் உள்ளத்தை பெலனாக வைத்துக் கொள்ள உதவி செய்யுங்கள். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்." (சங்கீதம் 50:15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜனவரி

05 வியாழன்

**தேவன் செய்கிறதைத் தடுப்பவன் யார்?**

வேதவாசிப்பு

1 இராஜாக்கள் அதி: 03-04

**"தேவனால் உண்டாயிருந்ததேயானால், அதை ஒழித்துவிட உங்களால் கூடாது; தேவனோடே போர்செய்கிறவர்களாய்க் காணப்படாதபடிக்குப் பாருங்கள் என்றான்."**
(அப்போஸ்தலர் 5:39)

தேவ பிள்ளைகளே! ஜீவனுள்ளவருமாய் வல்லமையான கிரியைகளைச் செய்கிறவருமாயிக்கிற **இயேசுகிறிஸ்துவின் அன்பினால் வழி நடத்தப்படும் அன்பான தேவ பிள்ளைகளே உங்களை இன்றைய நந்நாளில் வாழ்த்துகின்றேன்.** இன்றைய நாளிலும் **இவ் ஜீவ மன்னா தினமஞ்சரிக்கூடாக** தேவ வசனங்களை வாசிக்கின்ற **நீங்கள் அதிர்ஷ்டசாலிகள்**! ஏனென்றால் இந்த சஞ்சிகை உங்கள் கரங்களுக்கு கிடைத்தது நீங்கள் அதனை வாசித்து பலன் பெறுவதும் தேவன் உங்களை தெரிந்துக் கொண்டு இச் சஞ்சிகையை **உங்கள் கரங்களுக்கு மாதந்தோறும் பெற்றுக் கொள்ளச் செய்வதும் தேவனின் சித்தமேயாகும்.** ஆகையால் **ஒவ்வொரு நாளும் தேவ வசனங்களை வாசித்து உங்கள் உள்ளத்தில் பெலன் பெற்றுக் கொள்ளுங்கள். தைரியமாயிருங்கள்**!

தேவ பிள்ளைகளே! மேலே கூறப்பட்ட தேவ வசனத்தின் கருத்து மனிதனின் ஆலோசனையின்படி அல்லது நினைவுகளை செயல்படுத்துவதன் பிரதிபலனையே நாம் சுயமாக இயங்குகின்ற போது அவைகள் வெற்றி பெறினும் குறிப்பிட்ட காலம் வரை தொடர்ந்து சரியாக நிகழ்ந்திடினும் எந்த வேளையிலும் அவைகள் எதிர்பாரா வண்ணம் சிதைந்து வீணாகிப் போகலாம். ஆனால் **தேவனின் திட்டங்கள் நிறைவேற்ற இடமளிக்கின்ற வேளை அவைகள் ஒரு போதும் வீணாகாது. அவைகளை ஒரு போதும் நிர்மூலப்படுத்த யாராலும் முடியாது.** ஆகையால் ஆத்மீக பிள்ளைகளான நீங்கள் உங்கள் வாழ்வை **தேவனின் கரங்களில் அர்ப்பணித்திருப்பதனால் உங்கள் எதிர் காலத்தைக் குறித்தும் வாழ்வின் எக்காரியத்தைக் குறித்தும் தேவையற்ற பயத்தை உருவாக்கி கொள்ளாதீர்கள். உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக**!

தேவ பிள்ளைகளே! **நீங்கள் உங்கள் வாழ்வை தேவன் கரங்களில் ஒப்படைத்ததன் பிறகு உங்கள் வாழ்வின் எல்லா காரியங்களையும் அவர் நேர்த்தியாக நிறை வேற்றுவார்.** உங்கள் தொழில், வியாபாரம், கல்வி எதுவாக இருப்பினும் நீங்கள் கைக்கிரியைகள் அனைத்தையும் நன்மையாக ஆசீர்வதித்து அவைகளை நாளுக்கு நாள் பெருகச் செய்து உங்கள் வாழ்வில் வெற்றியைத் தருவார். ஆகையால் அனைத்தையும் தேவனின் பிரியத்தின்படி செய்ய வேண்டுமென்று உறுதி கொள்ளுங்கள். ஏனென்றால் **அப்போஸ்தலர் நடபடிகள் 5:39**இன்படி "**நீங்கள் தேவனின் சித்தத்தின்படி கிரியை செய்யும் போது அவர் வெற்றி பெறச் செய்வார். அவைகளை ஒரு மனிதனுக்கோ அந்தகாரத்தில் கிரியை செய்யும் வல்லமைக்கோ இவைகளுக்கு விரோதமாக செயல்பட்டு ஜெயம் பெற முடியாது.**" **தேவனது பரிபூரண அநுக்கிரகத்தைப் பெற்று செயல்படுங்கள். ஆசீர்வாதமான நாள்**!

ஜெபம்

என் பரலோக தேவனே! நீங்கள் யோசனையில் பெரியவர் கிரியைகளில் வல்லவராக இருக்கின்றீர்கள் என்பதை நான் அறிவேன். ஆகையால் என் வாழ்வின் சகல காரியங்களையும் உங்கள் சித்தத்தின்படியே நிறைவேற்ற எனக்கு வழி காட்டுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"நாள் உண்டாகாததற்குமுன்னும் நானே இருக்கிறேன்; என் கைக்குத் தப்புவிக்கத்தக்கவன் இல்லை; நான் செய்கிறதைத் தடுப்பவன் யார்?"
(ஏசாயா 43:13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜனவரி

06 வெள்ளி

**உடனடியாக உங்களை குணமாக்கும் தேவன்!**

வேதவாசிப்பு

1 இராஜாக்கள் அதி: 05-06

**"உடனே அந்த மனுஷன் சொஸ்தமாகி, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு, நடந்துபோனான்...."** (பரி.யோவான் 5:9)

அன்பான தேவ பிள்ளைகளே! மகிழ்ச்சியாயிருப்பதும் உயிரோடிருக்கையில் நன்மை செய்வதுமேயல்லாமல் வேறொரு நன்மை இவ்வுலகில் காண்பதில்லை என்பதால் நீங்கள் **இன்றைய நாளில் நன்மைகளைச் செய்து மனமகிழ்ச்சியோடிருக்க வாழ்த்துகின்றேன். உங்கள் தேவனாகிய கர்த்தர் யெகோவா ராப்பாவான தேவனாவார் அதன் கருத்து என்றால் தேவன் எம்மை குணமாக்கும் தேவன் என்பதே.** இன்றும் தேவன் ஜீவிக்கின்றவராக இருப்பதனால் உங்களை சுகமாக்கி விடுதலை தருகின்றார். ஆகையால் **உள்ளம் கலங்காதீர்கள்!**

தேவ பிள்ளைகளே! **பரி.யோவான் 5:9**இல் எழுதியிருப்பது **"எருசலேம் ஆட்டு வாசலினருகே பெதஸ்தா என்னப்பட்ட குளத்தினருகில் முப்பத்தெட்டு வருஷம் வியாதியுடனிருந்த ஒரு மனுஷனை இயேசுகிறிஸ்து சுகமாக்கிய நிகழ்வையே இந்த குளத்தில் ஐந்து மண்டபங்களுண்டு என்றும் அவைகளிலே குருடர் சப்பாணிகள் சூம்பின உறுப்புடையவர்கள் முதலான வியாதிக்காரர் அநேகர் படுத்திருந்து தண்ணீர் எப்பொழுது கலங்கும் என்று காத்துக் கொண்டிருப்பார்கள்"** என்றும் எழுதப்பட்டுள்ளது. முப்பத்தெட்டு வருடங்கள் வியாதிப்பட்டு சுகமே கிடைக்காமல் படுத்திருந்தவனை இயேசுகிறிஸ்து கண்டு அவனை நோக்கி எழுந்திரு உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட எனக் கூறினார். தேவ பிள்ளைகளே! மேலே கூறப்பட்ட **பரி.யோவான் 5:9**இல் **"உடனே அந்த மனுஷன் சொஸ்தமாகி தன் படுக்கையை எடுத்துக் கொண்டு நடந்து போனான்"** என்றெழுதப்பட்டுள்ளமையால் எம் இரட்சகர் இயேசுகிறிஸ்து எவ்வளவு வல்லமையானவர் என எண்ணிப் பாருங்கள். **38 வருடங்கள் வியாதிப்பட்டு படுத்திருந்த மனிதன் உடனே குணமானது எப்படி? அது மிகவும் கஷ்டமான காரியமல்லவா? ஆனாலும் தேவன் உடனே சுகமாக்கினார்.**

தேவ பிள்ளைகளே! **இச் செய்தியை வாசிக்கின்ற உங்களில் பலர் வியாதியோடு இருக்கின்றீர்களா? ஆனாலும் பயப்படாதீர்கள்!** உங்கள் நோய் சிறிதாக இருப்பினும் குழப்பத்தினால் கலக்கமுற்று காணப்படுகின்றீர்களா? அல்லது பல வருடங்கள் நோயோடும் பரம்பரை பாவ, சாபங்களோடும் வேதனைப்படுகின்றீர்களா? உங்களுக்கு மாத்திரமின்றி பிள்ளைகளுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும் நோய்களினால் மீட்பின்றி, சுகத்தைப் பெற வழியின்றி கலக்கத்துடன் ஜீவிக்கின்றீர்களா? **எரேமியா 33:3**இல் **கர்த்தர் உங்களுக்கு கூறுவது என்ன?** என்று ஞாபகத்தில் வைத்துக் கொண்டு ஜெபியுங்கள். **"அப்பொழுது தேவன் உங்களுக்கு உத்தரவு கொடுத்து அறியாததும் எட்டாததுமான காரியங்களைச் செய்வார்." விசுவாசத்தோடு ஜெபித்து நோய்களிலிருந்து சுகத்தையும், மீட்பையும் பெறுங்கள்.** ஒரு மனதோடு ஒரே விசுவாசத்தோடு ஜெபிப்பவர்கள் மீது தேவன் பிரியமாயிருக்கிறார். **விடுதலையின் நாள்!**

ஜெபம்

கிருபை நிறைந்த இயேசுவே! நீங்கள் எம்மை சுகப்படுத்தும் தேவன் என்பதால் உங்கள் குமாரனான இயேசுகிறிஸ்து அவர் பெற்ற கசையடிகள், காயங்களுக்கூடாக நாம் இன்றும் சுகம் பெற்று வாழ்கின்றோம். உங்களுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக! இயேசுகிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்; ஐசுவரியவனாகிறதற்குத் தீவிரிக்கிறவனோ ஆக்கினைக்குத் தப்பான்." (நீதிமொழிகள் 28:20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜனவரி
07 சனி

வனாந்தரமான
உங்கள் வாழ்வை
பசுஞ்சோலையாக
மாற்ற வல்ல தேவன்!

வேதவாசிப்பு
1 இராஜாக்கள்
அதி: 07–08

**"உயர்ந்த மேடுகளில் ஆறுகளையும், பள்ளத்தாக்குகளின் நடுவே ஊற்றுகளையும் திறந்து, வனாந்தரத்தைத் தண்ணீர்த் தடாகமும், வறண்ட பூமியை நீர்க்கேணிகளுமாக்கி,"**
(ஏசாயா 41:18)

**பயப்படாதே நான் உன்னுடனே இருக்கிறேன் திகையாதே நான் உன் தேவன் என்றுரைத்திருக்கும் நம் பரலோக தேவனின் உரிமைப் பிள்ளைகளான உங்களை ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் இன்று வாழ்த்துகின்றேன்.** உலகில் பெரும்பாலான மனிதர்கள் தம் வாழ்வில் வேதனை, உபத்திரவம், பிரச்சினைகள் காரணமாக கண்ணீருடன் வாழ்கின்றார்கள். இவைகளின் காரணமாக வாழ்வில் சந்தோஷம், சமாதானம், சுகம், ஆறுதல் காணப்படுவதில்லை. ஆனாலும் ***நீங்கள் அதிர்ஷ்டசாலிகள்***! ஏனெனில் எம்மை எல்லா வழிகளிலும் ஆசீர்வதிக்கும் தேவன் நம்முடனே இருக்கின்றார்.

தேவ பிள்ளைகளே! மேலே கூறப்பட்ட பிரதான வேதாகம வசனமானது **"தேவன் வனாந்தரத்தைத் தண்ணீர் தடாகமாக்கி வறண்ட பூமியை நீர்க்கோணிகளுமாக்குகின்றார்"** என்றுரைக்கின்றது. தேவ பிள்ளைகளே! எங்கள் தேவனாகிய கர்த்தர் வானத்தையும், பூமியையும் காணப்படும் யாவற்றையும் வார்த்தையால் உருவாக்கியவராவார். தேவனுக்கு இயற்கை நிகழ்வுகளிலும் எங்கள் வாழ்விலும் செய்ய முடியாதவைகள் என்று ஒன்றுமேயில்லை. எங்கள் தேவன் சகலவற்றையும் செய்து முடிக்க வல்லவராவார். தேவனின் வசனங்கள் கூறுகிறது ***"இதோ நான் புதிய காரியத்தைச் செய்கிறேன் இப்பொழுதே அது தோன்றும். நீங்கள் அதை அறிவீர்களா? நான் வனாந்தரத்திலே வழியையும் அவாந்தர வெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவேன்." ஏசாயா 43:19*** இன்றைய நாளிலும் தேவன் கூறியிருப்பது ***வனாந்தரத்தைத் தண்ணீர் தடாகமாக்கி, வறண்ட பூமியை நீர்க்கோணிகளுமாக்குவேன் என்றல்லவா?***

தேவ பிள்ளைகளே! **உங்களால் இவைகளை எண்ண முடியாதிருக்கின்றதா? தேவன் மனிதனல்ல மனிதனையும் உருவாக்கிய தேவனாவார்.** ஆகையால் அவரது ஒவ்வொரு செயலும் மனிதர்களாகிய எம்மால் நினைத்து பார்க்க முடியாத அளவுக்கு எம்மை ஆச்சரியப்பட வைப்பவைகளாக இருக்கும். **நீங்கள் ஆத்மீக பிள்ளையாயின் உலகத்தவரைப் போன்று உங்களுக்கும் பிரச்சினை, உபத்திரவங்கள், வேதனைகள், ஏற்படும். ஒவ்வொரு நாளும் நீங்கள் அவைகளுக்கு முகங் கொடுக்க நேரிடும்.** ஆனாலும் **நீண்ட காலம் அப்படியாக வேதனைப்பட இடங்கொடாமல் அவற்றிலிருந்து மீட்க உங்கள் தேவன் உங்களோடிருப்பார்.** உலகத்தவர்களை விட ***மிகவும் அதிர்ஷ்டசாலிகள்***! இயற்கையாக நடைபெறும் நிகழ்வுகளைக் கூட மாற்றுகின்ற தேவன் உங்கள் வாழ்வை ஆசீர்வாதமாக மாற்ற மாட்டாரா? விசுவாசமாயிருங்கள் பாலைவனத்தைப் போன்ற **உங்கள் வாழ்வை பசுஞ் சோலையாக மாற்ற தேவன் வல்லவர். மனமகிழ்ச்சியின் நாள்!**

ஜெபம்

மகா பரிசுத்தமுள்ள பிதாவே! நீங்கள் சிருஷ்டிப்பின் தேவன் என்பதால் உங்களால் செய்ய முடியாது என்று ஒன்றுமே இல்லை. தண்ணீர் இல்லாத வறண்ட நிலமான என் வாழ்வை களிப்பான நீரூற்றுக்களை உருவாக்கி ஆசீர்வதியுங்கள்.
இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி, மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார்; நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப்போலவும், வற்றாத நீரூற்றைப்போலவும் இருப்பாய்." (ஏசாயா 58:11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜனவரி

08 ஞாயிறு

தேவனுக்கு பிரியமுள்ளவனாக வாழ்கின்ற மனிதனுக்குச் செவி கொடுக்கும் தேவன்!

வேதவாசிப்பு

1 இராஜாக்கள் அதி: 09–10

**"பாவிகளுக்குத் தேவன் செவிகொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறோம், ஒருவன் தேவபக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவிகொடுப்பார்."** (பரி.யோவான் 9:31)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! பாவங்களை வெறுக்கிறவரும் பாவிகளை நேசித்து அரவணைக்கும் தெய்வமாகிய **இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தினால் இன்றைய நாளில் உங்களை வாழ்த்துகின்றேன்.** பரத்தில் வாசம் பண்ணும எங்களைச் சிருஷ்டித்த தேவ பிதாவானவரின் சொந்த பிள்ளைகளாக இருக்கின்ற **நாம் அனைவரும் அதிர்ஷ்டசாலிகள்!** ஏனென்றால் **சங்கீதம் 83:17**இல் **"யெகோவா என்னும் நாமத்தையுடைய தேவரீர் ஒருவரே பூமியனைத்தின் மேலும் உன்னதமானவர் என்று மனுஷர் உணரும்படி"** என எழுதப்பட்டுள்ளது.

தேவ பிள்ளைகளே! உன்னதமானவரை நாம் பரலோகப் பிதா என அழைக்க கிடைத்தது பாக்கியமல்லவா? ஏனென்றால் **யோவான் 9:31**இல் எழுதப்பட்டிருப்பது, **"பாவிகளுக்கு தேவன் செவி கொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறோம். ஒருவன் தேவ பக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவி கொடுப்பார்"** என்றே ஆகும். அப்படியாயின் உங்கள் குரலுக்கு தேவன் செவி கொடுப்பது நீங்கள் தேவ பக்தியுள்ளவர்களாயிருந்து அவருக்குச் சித்தமான காரியங்களைச் செய்தல் ஆகும். **உங்களுக்கு இவ் வரப்பிரசாதம் கிடைத்தது எப்படி?** என்று நீங்கள் நினைத்துப் பாருங்கள். தேவனுக்கூடாக உங்களை தெரிந்துக் கொண்டு உன்னதமானவருடைய அழைப்பைப் பெற்ற ஒவ்வொருவருக்கும் தேவ ஆவியானவரைக் தந்தருளியிருக்கிறபடியால் ஆகும்.

தேவ பிள்ளைகளே! **குமாரனான இயேசுகிறிஸ்து உங்கள் இரட்சகர் என்றும் தேவனின் சரீரத்தின் கறைதிரையற்ற பரிசுத்த இரத்தத்தினால் எமது பாவங்கள் அனைத்தையும் கழுவி பரிசுத்தப்படுத்தினார்** என விசுவாசிக்கும் நாம் யாவரும் பாவங்களிலிருந்து விடுதலை பெறுவோம். **1யோவான் 1:7**இல் எழுதியிருப்பது **"அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்"** என்றாகும். இன்னுமாக **பரலோக பிதாவானவர் எங்களுக்குச் செவி கொடுக்க வேண்டுமெனின் நாம் அவருக்குப் பிரியமானவைகளை செய்ய வேண்டும். நாம் தேவனுக்கு பிரியமானபடி வாழவும், செயல்படவும் பெலன் கிடைப்பது தேவ ஆவியானவர் எமக்குள் வாசம் பண்ணினால் மாத்திரமே.** இல்லாவிட்டால் நாம் மாம்சத்தின்படி கிரியைகளைச் செய்து எங்களைத் திருப்திபடுத்த முயற்சி செய்வோம். ஆகையால் எம்மை பாவத்தில் மீட்டுக் கொண்டு தேவ ஆவியானவரை எமக்கு ஈந்தருளி தேவனை ஆராதித்து அவரின் சித்தங்களை இப்பூமியில் நிறைவேற்றுபவர்களை இப்புவியில் ஜீவிக்க கிருபையளிக்கும் **தேவ பிதாவானவர் இன்றும் உங்களுக்குச் செவி கொடுப்பார். கிருபையின் நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் என்னை பாவத்தினின்று மீட்டும் தேவ ஆவியானவரை எனக்குத் தந்தமையால் ஸ்தோத்தரிக்கின்றேன். அவருக்கூடாக உங்கள் பிள்ளைகளாக உங்களை ஆராதிக்கவும் உங்களுக்குப் பிரியமானபடி இவ்வுலகில் வாழவும் நீங்கள் எனக்கு கிருபை அளிக்கும்படியாக இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அந்தப்படியே நாம் இருதிறத்தாரும் ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர்மூலமாய்ப் பெற்றிருக்கிறோம்."
(எபேசியர் 2:18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜனவரி

09 திங்கள்

தேவனின் சமூகத்தில் காத்திருந்து ஆவியின் கனிகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்!

வேதவாசிப்பு

1 இராஜாக்கள் அதி: 11–12

**"ஆவியின் கனியோ, ......., இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை."** (கலாத்தியர் 5:22,23)

தேவ பிள்ளைகளே! ஜீவனுள்ளவராய் கிரியை செய்கின்ற **இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் இன்றைய நாளில் மன்னா வாசகர் அனைவரையும் மனப்பூர்வமாய் வாழ்த்துகின்றேன்.** தேவனின் பிள்ளைகளான **நாம் மிகவும் அதிர்ஷ்டசாலிகள்**! ஏனென்றால் எங்கள் இரட்சகரான இயேசுகிறிஸ்துவின் பேரில் நாம் கொண்ட விசுவாசத்தின் நிமித்தம் தேவனின் சொந்தப் பிள்ளைகளான எமக்கு அவரின் பரிசுத்த தேவ ஆவியானவர் எனும் வாக்குத்தத்தின் ஆவியானவரைப் பெற்றுள்ளோம் இன்னுமான **தேவ ஆவியானவருக்கூடாக ஆவியின் கனிகள் ஒன்பதையும் நாம் கிடைக்கப் பெற்றோம்.**

தேவ பிள்ளைகளே! நாம் கிறிஸ்துவுக்குள் ஜீவிக்கின்ற வேளை தேவ ஆவியானவருக்கூடாக ஆவியின் கனிகள் கிடைக்கின்றன. **பரி.யோவான் 15:5**இல் எழுதியிருப்பது, "**நானே திராட்சைச் செடி நீங்கள் கொடிகள் ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான். என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது**" என்றாகும். ஆகையால் இயேசுகிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கும் யாவரும் கனி கொடுப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. **இந்த இச்சையடக்கம் எனும் ஆவியின் கனியானது எங்களுக்குள் கிரியை செய்யுமானால் எங்கள் வாழ்வில் பெரும்பாலாக நன்மைகளே நடைபெறும்.** இந்த ஆவியின் கனிக்கூடாக எமது வாழ்வில் உருவாகின்ற அநேக தேவையற்ற பிரச்சினைகள், வேதனைகள் என்பவற்றிலிருந்து நம்மை நாம் காத்துக் கொள்ளலாம். உதாரணமாகக் கூறினால் **மனிதர்களோடு அதிக நட்புறவை கொள்ளுமிடத்தும், அதிகமாக விசுவாசிக்கும் போதும் தேவையற்ற பிரச்சினைகள், இன்னல்கள் என்பவற்றைச் சந்திக்க நேரிடுவதையும் நீங்கள் அறிந்தும் அநுபவித்தும் இருப்பீர்கள் என நினைக்கின்றேன்.**

தேவ பிள்ளைகளே! மேலே கூறப்பட்ட **ஆவியின் கனியாகிய இச்சையடக்கம் எங்களுக்குள் காணப்படின் அளவுக்கு மீறி மனிதர்கள் பேரில் நம்பிக்கை வைப்பதால் எமக்கு ஏற்படும் பிரச்சினைகள், உபத்திரவங்களிலிருந்து நாம் தப்பித்துக் கொள்ள முடியும்.** தேவ பிள்ளைகளே! நாம் தேவனின் பாதத்தில் இடைவிடாது ஜெபிக்கும் போதும், உபவாசத்தில் காத்திருக்கும் போதும் தேவ ஆவியினால் நிரப்பப்படுகின்ற வேளையில் **இந்த ஆவியின் கனி மாத்திரமல்ல ஆவியானவர் அவரது ஒன்பது கனிகளிலும் எம்மை நிறைந்திடச் செய்வார்.** அவைகள் ஏற்ற நேரத்தில் எம்மில் கிரியை செய்யும் ஆகையால் ஒவ்வொரு நாளும் உங்கள் ஜெப நேரங்களில் **இடைவிடாது தேவனின் பாதத்தைப் பற்றிக் கொள்ளுங்கள்.** எப்பொழுதும் தேவனது ஆவியோடு கலந்து உறவாடுங்கள். **இச்சையடக்கம் எனும் ஆவியின் கனிக்கூடாக நீங்கள் ஞானத்தோடு செயல்பட்டு வெற்றி பெறுங்கள். வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் இயேசுவே! உங்கள் சொந்தப் பிள்ளையான எனக்கு உங்கள் தேவ ஆவியானவருக்கூடாக இச்சையடக்கம் எனும் ஆவியின் கனியை எனக்கு பெற்றுத் தாருங்கள். அந்தக்கனிக்கூடாக ஞானமாக செயல்பட்டு வாழ்வின் ஜெயம் பெற எனக்கு உதவி செய்யுங்கள். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்." (2 தீமோத்தேயு 1:7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜனவரி
10 செவ்வாய்

வலது பாரிசத்திலிருந்து
எமக்காக வேண்டுதல்
செய்யும் தேவன்!

வேதவாசிப்பு
1 இராஜாக்கள்
அதி: 13–14

**"...கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல்செய்கிறவரும் அவரே."**
(ரோமர் 8:34)

அருமையான தேவ பிள்ளைகளே! **இயேசுகிறிஸ்துவின் ஈடு இணையற்றதும், அளவற்றவதுமான அன்பினால் உலகில் வேறுபிரிக்கப்பட்டு நன்மைகளினால் முடிசூட்டப்பட்டு ஜீவிக்கும் உங்கள் அனைவரையும் இன்றைய நாளில் வாழ்த்துகின்றேன்.** உலக மனிதன் இன்னுமொரு மனிதர்களுக்காக வேண்டுதல் செய்வதைக் பார்க்கிலும் எங்கள் பாவங்கள், சாபங்கள் காரணமாக விலைக்கிரயம் செலுத்திய **இயேசுகிறிஸ்து எங்களுக்காக பரலோக பிதாவானவரின் முன்னிலையில் வேண்டுதல் செய்து மத்தியஸ்தம் பண்ணுகிறார் என்று விசுவாசிக்கின்றீர்களா?**

தேவ பிள்ளைகளே! நீங்களும் இதை விசுவாசியுங்கள் இது உங்களுக்கு ஆசீர்வாதமாகும். **யோவான் 11:40**இல் "**நீ விசுவாசித்தால் தேவ மகிமையைக் காண்பாய் என்று இயேசுகிறிஸ்து மார்த்தாளிடம்**" கூறுகின்றார். ஆகையால் உங்களுக்காக உயிரைத் தியாகம் செய்த இயேசுகிறிஸ்து இன்றும் உங்களுக்காக வேண்டுதல் செய்கின்றார் என்பதை விசுவாசியுங்கள். மேலே கூறப்பட்ட **ரோமர் 8:34**இல் எழுதப்பட்டிருப்பது, "**கிறிஸ்து மரித்தவர், அவரே எழுந்துமிருக்கிறவர், அவரே தேவனுடைய வலது பரிசத்திலும் இருக்கிறவர், நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே**" என்றாகும். ஆவிக்குரிய தேவ பிள்ளைகளான எமக்கு விரோதமாக எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப் போட்டு அவைகளினால் **எமக்குத் துன்பங்கள் நேராத வண்ணம் பாதுகாக்க இயேசுகிறிஸ்து எம்மோடிருந்து எமக்காக வேண்டுதல் செய்கிறார்.**

தேவ பிள்ளைகளே! **எபேசியர் 6:16**இல் கூறப்படுவது, "**பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்து போடத்தக்கதாய் எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர்களாயும் நில்லுங்கள்**" என்றே. தேவ பிள்ளைகளே சாத்தான் அக்கினியாஸ்திரம் அனுப்புவது எங்கள் உள்ளத்திற்கே. ஏனென்றால் எமது உள்ளம் அதைரியப்படுமிடத்து எங்கள் ஆத்துமாவனது பெலவீனப்படும் வேளையில் நாம் பலவீனர்களாவோம். அப்பொழுது எம்மை பின்மாற்றமடையச் செய்ய சாத்தானுக்கு மிக இலகுவாக இருக்கும். ஆனாலும் **பலவித சோதனைகள், உபத்திரவங்கள், பிரச்சினைகளுக்கூடாக எங்கள் உள்ளத்திற்கு அக்கினியாஸ்திரங்கள் அனுப்பும் போது தேவன் பேரில் நாம் வைக்கும் விசுவாசம் எனும் கேடகம் எங்கள் உள்ளத்தைப் பாதுகாப்பதாக,** இரட்சகர் இயேசுகிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராக எல்லா வேளையிலும் எமக்காக வேண்டுதல் செய்கிறார் என **முழு உள்ளத்தோடு விசுவாசியுங்கள்.** அது கேடகமாக உங்களை பாதுகாக்கும். உங்கள் உள்ளம் பெலனடைவதாக! **சந்தோஷத்தின் நாள்!**

ஜெபம்

மகிமை நிறைந்த தேவனே! உங்கள் இராஜ்யத்தில் வலது பாரிசத்திலிருந்து எனக்காக வேண்டுதல் செய்கின்ற உங்கள் திருக்குமாரனை ஸ்தோத்தரிக்கின்றேன்! பிதாவே! எங்கள் ஜெபங்களுக்கு செவிமடுத்து எங்களை ஆசீர்வதிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

இன்றைய வாக்குத்தத்தம்

"தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே." (1 தீமோத்தேயு 2:5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜனவரி

11 புதன்

தேவனைத் தேடுங்கள் அப்பொழுது பிழைப்பீர்கள்!

வேதவாசிப்பு

1 இராஜாக்கள் அதி: 15–16

**"கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்குச் சொல்லுகிறது என்னவென்றால்: என்னைத் தேடுங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்."** (ஆமோஸ் 5:4)

அருமையான தேவ பிள்ளைகளே! **இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் இன்றைய நாளில் நீங்கள் தேவ கிருபையால் வழி நடத்தப்பட வேண்டுமென வாழ்த்துகின்றேன்.** உலகிலே பெரிய ஒரு குடும்பத்திற்குச் சொந்தமானவர்களான **நீங்கள் அதிர்ஷ்டசாலிகள்**! அவ்வண்ணமே தேவ பிதாவின் சொந்த பிள்ளையாக தேவனால் தெரிந்துக் கொள்ளப்பட்ட **உங்கள் வாழ்விற்குச் சொந்தமான ஆசீர்வாதங்களை தேவன் இன்றும் ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிறார்.** ஆகையால் **இன்றைய நாள் ஆரம்பத்தில் தேவனை ஸ்தோத்தரித்து நீங்கள் அன்றாட கடமைகளை மகிழ்ச்சியுடன் ஆரம்பியுங்கள்.**

தேவ பிள்ளைகளே! **நீங்கள் எவ்வளவு விஷேசித்தவர்?** நீங்கள் இதை அறியமாட்டீர்கள். **நீங்கள் பெற்றிருக்கும் வரப்பிரசாதம் என்ன என்பதை அறிந்துக் கொண்டிருப்பீர்களெனின் அது எவ்வளவு விஷேசமானதென்று நீங்கள் புரிந்துக் கொள்வீர்கள்.** உலகில் **"நோபல் பரிசு"** என விஷேட வரப்பிரசாதத்தை கொடுப்பவர்களுமுண்டு. உலகிலே மிகுந்த செல்வத்தை உடையவர்கள், உலகிலேயே சமுதாயத்திற்கு உதவிகள் செய்த பிரபல மனிதர்கள் யார் எனத் தேடிப் பார்த்து தமது பணத்தை தேர்ந்தெடுக்கப்பட்டவருக்கு நன்கொடையாகக் கொடுப்பார்கள். **முழு உலகிலும் ஒருவருக்கு மாத்திரமே இந்த நன்கொடை உரிமையாகும்.**

தேவ பிள்ளைகளே! **நோபல் பரிசைப் பெறும் ஒருவரெனினும் பரலோக இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து அவருடைய வசனங்களின்படி நடக்க வேண்டுமென்பது மிக அவசியமென்பதை அறிவோம்.** ஏனென்றால் **பரி.யோவான் 14:6**இல் **"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்"** என்று உரைக்கப்பட்டுள்ளது. **பரி.யோவான் 15:16**இல் **"நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை நான் உங்களைத் தெரிந்துக் கொண்டேன்"** என்று சொல்லப்பட்டுள்ளது. ஆகையால் அபிப்பிராயத்தில் உங்களையும் என்னையும் தேர்ந்தெடுத்து தேவனது இராஜ்யத்திற்கு உரிமையாளர்களாக்குவது எத்தனை உன்னதமான காரியம்? இன்றைய நாளில் **ஆமோஸ் 5:4**இல் கூறுவது **"தேவனைத் தேடும்படியாகவே. எமக்கு பரலோகப் பிதாவின் எல்லையற்ற அன்பு ஜீவக்கிரீடமாக இருப்பதால், விலையில்லாமல் கிடைத்திருப்பதால் எளிதாக எண்ணாதீர்கள்."** உங்கள் இரட்சிப்பு அதி உன்னதமானது உபத்திரவக் காலம் வரும் போது இன்றிலிருந்து தேவனை தேடினால் மாத்திரமே பிழைப்பீர்கள். பரலோக நித்திய ஜீவனை பெறுவீர்கள். **வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

மகா பரிசுத்தமுள்ள பிதாவே! உங்கள் சொந்த அபிப்பிராயத்திற் கூடாக என்னை இயேசுகிறிஸ்துவுக்குள் அழைத்துக் கொண்டீர்கள். உங்கள் அளவில்லா அன்பை திருக்குமாரனுக்கூடாக வெளிப்படுத்தி என்னையும் ஜீவனுள்ளோர் வாழும் பரலோகத்திற்கு உரிமையாளராகக் கொண்டமையால் நன்றி! இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"ஏனெனில், உலகமுண்டானதுமுதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனி மேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்." (பரி.மத்தேயு 24:21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜனவரி

12 வியாழன்

## தம்மைத் தேடும் உணர்வுள்ளவர்களை கண்ணோக்கும் தேவன்!

வேதவாசிப்பு

1 இராஜாக்கள் அதி: 17–18

**"ஆகிலும் நீர் விக்கிரகத்தோப்புகளை தேசத்தை விட்டகற்றி, தேவனைத் தேட உம்முடைய இருதயத்தை நேராக்கின விஷயத்தில் நன்மையான காரியங்கள் உம்மிடத்தில் காணப்பட்டது உண்டு என்றான்."** (2 நாளாகமம் 19:3)

பிரியமான தேவ பிள்ளைகளே! **நேற்றும், இன்றும், என்றும் மாறாத அளவற்ற அன்பினால் எம்மை வழி நடத்துகின்ற ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் வாழ்த்துகின்றேன்.** பரத்தில் வாசம் பண்ணும் ஜீவிக்கின்ற தேவனது **விலைமதிக்க முடியாத சம்பத்தமாக உலகில் வேறுபிரித்துக் கொண்ட நீங்கள் மிகவும் பாக்கியவான்கள்**! ஏனெனில் **யாத்திராகமம் 19:5**இல் இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு என் உடன்படிக்கையைக் கைக் கொள்வீர்களேயானால் "**சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள் பூமியெல்லாம் என்னுடையது, என கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு மொழிந்திருக்கின்றார்.**"

தேவ பிள்ளைகளே! அது இஸ்ரவேல் ஜனங்களுக்கு மாத்திரம் அல்ல எமக்கும் அப்படியே. இஸ்ரவேலரை மாத்திரம் அல்ல எம்மையும் சிருஷ்டித்தது கர்த்தரே! மேலே கூறப்பட்டுள்ள **2 நாளாகமம் 19:3**இல் எழுதியிருப்பது, "**யூதாவின் இராஜாவான யோசபாத் எருசலேமில் தனது இல்லத்திற்கு திரும்பி வருகையில் அனானியின் குமாரனை யெகூ எனும் ஞானதிருஷ்டிக்காரன் இராஜாவிற்கு கூறியதாகும். ஏனென்றால் யோசபாத் இராஜா இஸ்ரவேல் இராஜாவான ஆகாப் என்பவருடன் ராமாத்–கீலேயாத் யுத்தத்திற்குப் புறப்பட்டான்.**" அது தேவன் முன்னிலையில் நன்மையாகக் காணப்படவில்லை என யெகூ யூதாவின் இராஜாவிற்கு வெளிப்படுத்தினார். **ஆகாப் இராஜா விக்கிரக தோப்புகளை உருவாக்கி வணங்குதலின் மூலம் இஸ்ரவேல் ஜனங்களையும் பாவஞ் செய்யப் பண்ணினான். அவன் இஸ்ரவேல் தேவனின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்.** ஏத்பாகாலின் குமாரத்தி யேசபேலை விவாகம் பண்ணினதுமில்லாமல் அவன் போய் பாகாலையும் சேவித்து அதைப் பணிந்துக் கொண்டான். இன்னுமாக "**சமாரியாவில் விக்கிரகத் தோப்பை வைத்து பாகாலுக்கு பலிபீடத்தை உருவாக்கினான்**" என்று **1 இராஜாக்கள் 16:29–33** வரை வாசியுங்கள்.

தேவ பிள்ளைகளே! **யூதாவின் இராஜாவிடம் யெகூ தீர்க்கதரிசி கூறுவது "துன்மார்க்கனுக்குத் துணை நின்று கர்த்தரைப் பகைக்கிறவர்களை நீர் சிநேகிக்கலாமா? இதனிமித்தம் கர்த்தரின் கடுங்கோபம் உம்மேல் வர இருந்தது.** ஆகிலும் நீர் விக்கிரகத்தோப்புகளை விட்டகற்றி தேவனைத் தேட உம்முடைய இருதயத்தை நேராக்கின விஷயத்தில் நன்மையான காரியங்கள் உம்மிடத்தில் காணப்பட்டது உண்டு என்றான் என்றாகும். ஆகையால் தேவனது கருணை அவனுக்கு கிடைத்தது. **நீங்களும் தேவனைத் தேடும் போது அவரது கிருபை உங்களைத் தாங்கி நித்தமும் வழி நடத்தும். வெற்றிச் சிறந்த நாள்!**

ஜெபம்

அன்பான தேவனே! உங்கள் அளவற்ற அன்பினால் எங்களை அரவணைக்கிறபடியால் ஸ்தோத்திரம்! எல்லாவற்றிற்கும் மேலாக உங்களைத் தேடுவதற்கு என் உள்ளத்தை ஒப்புக் கொடுத்ததின் நிமித்தம் பிரியமானவராயிருக்கிறபடியால் நன்றி! என் உள்ளத்தை முழுவதுமாக ஒப்புக் கொடுத்து உம்மை முழு உள்ளத்தோடு தேட கிருபையளிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவன் உண்டோ என்று பார்க்க, தேவன் பரலோகத்திலிருந்து மனுபுத்திரரைக் கண்ணோக்கினார்." (சங்கீதம் 53:2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜனவரி
13 வெள்ளி

நீங்கள்
விடுதலை பெற
ஆயத்தமா?

வேதவாசிப்பு
1 இராஜாக்கள்
அதி: 19–20

"கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு."
(2 கொரிந்தியர் 3:17)

அருமையான தேவ பிள்ளைகளே! ஜீவனுள்ள **இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அவருக்குள் எப்பொழுதும் வெற்றிச் சிறக்கப் பண்ணி, அவரை அறிகிற வாசனையை வெளிப்படுத்துகிற தேவனை ஸ்தோத்தரிக்கின்றேன்.** எங்களை சிருஷ்டித்த தேவ பிதாவானவர் எங்களுக்கு ஒத்தாசை அளிப்பதற்காக அவரது பரிசுத்த ஆவியானவரை எங்களுக்கு ஈந்தருளியிருக்கின்றார். தேவன் தேற்றரவாளனாக இன்றும் எமக்குள் வாசம் பண்ணுகிறார் ஆகையால் ***நீங்கள் அதிர்ஷ்டசாலிகள்!*** ஆவீர்கள்.

தேவ பிள்ளைகளே! மேலே கூறப்பட்டுள்ள பிரதான தேவ வசனத்தில் எழுதியருப்பதாவது, "**கர்த்தரே ஆவியானவர் கர்த்தருடைய ஆவி எங்கயோ அங்கே விடுதலையுண்டு**" என்றாகும். தேவ பிள்ளைகளே! அப்படியிருந்தும் **நாம் ஏன் இன்னும் விடுதலையற்றவர்களாக இருக்கின்றோம் என நீங்கள் நினைக்கலாம்.** மேலும் தினமும் பிரச்சினை, உபத்திரவம், சவால்களுக்கு முகங் கொடுக்க நேரிடுகின்றதே என எண்ணுகிறீர்களா? ஆனாலும் **கலங்காதீர்கள்! பரிசுத்த யோவான் 16:33**இல் "**என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் எங்களுக்கு உபத்திரவமுண்டு ஆனாலும் திடன் கொள்ளுங்கள்!**" என தேவன் எமக்குக் கூறியிருக்கின்றார். அதுமாத்திரமின்றி "இதுவரைக்கும் "**நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை கேளுங்கள் அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக் கொள்வீர்கள்.**" என **பரி.யோவான் 16:24**இல் கூறப்பட்டுள்ளது. தேவ ஆவியானவரே விடுதலையின் நாயகன் அவர் மூலமாகவே நாம் உலகை ஜெயிக்க முடியும்.

தேவ பிள்ளைகளே! விண்ணுலகில் வாசம் **பண்ணும் தேவ பிதாவின் சொந்த பிள்ளைகளான நாம் பரலோக இராஜ்யத்தின் நித்திய ஜீவ கிரீடத்தை உரிமை கோருகின்றபடியால் நாம் பரலோக இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க எமது ஆத்துமாவை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.** ஆகையால் தேவனின் கட்டளைகளை கடைப்பிடித்து இப்பூமியில் வாழ வேண்டும். உலகில் மற்ற மனிதர்களைப் போன்று எமது நினைவுகளின்படி, எமது விருப்பத்தின்படி வாழ முடியாது. அவ் வேளைகளில் எமது யோசனைகளை, வழிகளை கைவிட்டுவிட வேண்டும். எனக்கு விடுதலை கிடைக்கவில்லையே எனும் எண்ணத்தை விட்டு **எமக்காக தன்னுயிரைத்தியாகம் செய்த இயேசுவின் பின் செல்லுங்கள் தேவ ஆவியானவருக்கு உள்ளத்தில் இடமளித்து விடுதலை பெறுங்கள். வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! தேவ வசனத்தின்படி இப்பூமியில் ஜீவிக்க எமக்கு விடுதலை வரையறைக்குள் மாத்திரம் என நினைத்தேனா? என்னுடைய ஆத்மீக, சரீர பிரகாரமான கட்டுகளிலிருந்து என்னை மீட்டுக் கொள்ளுங்கள். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில்.

–ஆமென்–

இன்றைய வாக்குத்தத்தம்

"இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்தியஜீவன்." (ரோமர் 6:22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜனவரி
14 சனி

ஆபத்து நாளிலே
தேவனே எமது அரணான
கோட்டை!

வேதவாசிப்பு
1 இராஜாக்கள்
அதி: 21-22

**"கர்த்தர் நல்லவர், இக்கட்டுநாளிலே அரணான கோட்டை; தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார்."** (நாகூம் 1:7)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இன்றைய நாளில் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருந்து **இரட்சிப்பின் தேவனான இயேசுவுக்குள் களிகூர்ந்திருக்குமாறு வாழ்த்துகின்றேன். "உபத்திரவப்பட்டவனுடைய உபத்திரவத்தை அவர் அற்பமாயெண்ணாமலும், அருவருக்காமலும் தம்முடைய முகத்தை அவனுக்கு மறைக்காமலுமிருந்து, தம்மை நோக்கி அவன் கூப்பிடுகையில் அவனைக் கேட்டருளினார்." (சங்கீதம் 22:24).**

தேவ பிள்ளைகளே! ஆகையால் "**பொல்லாப்பு உனக்கு நேரிடாது வாதை உன் கூடாரத்தை அணுகாது**" என்று **சங்கீதம் 91:10**இல் எழுதப்பட்டுள்ளது. இங்கு கூடாரம் **2 கொரிந்தியர் 5:1**இல் "**பூமிக்குரிய கூடாரமாகிய தம்முடைய வீடு அழிந்து போனாலும் தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்**" என்று கூறப்பட்டுள்ளது. இங்கு கூடாரம் என்பதற்கு பவுலடியார் கூறும் கருத்து எமது சரீரத்தையே அப்படியே தாவீது இராஜாவிற்கு கர்த்தருக்கென்று ஒரு ஆலயம் கட்டுவதற்கு உள்ளத்தில் ஒரு ஆவல் எழுந்த போது அதை நாத்தான் எனும் தீர்க்கதரிசிக்குக் கூறினார். அப்பொழுது நாத்தான் தாவீதை நோக்கி உம்முடைய இருக்கிறதையெல்லாம் செய்யும் தேவன் உம்மோடு இருக்கிறார் என்றார். அன்று இரவே தேவன் நாத்தானிடம் "**நீ போய் என் தாசனாகிய தாவீதை நோக்கி நான் வாசமாயிருக்க நீ எனக்கு ஆலயத்தைக் கட்ட வேண்டாம். நான் இஸ்ரவேலரை வரப்பண்ணின நாள் முதற் கொண்டு இந்நாள் வரைக்கும் நான் ஒரு ஆலயத்திலே வாசம் பண்ணாமல் ஒரு கூடாரத்திலிருந்து மறு கூடாரத்திற்கும் ஒரு வாசஸ்தலத்திலிருந்து மறு வாசஸ்தலத்திற்கும் போனேன்**" என்று கூறினார்.

தேவ பிள்ளைகளே! அந்த வசனத்தின்படி கூடாரம் என்பது நாம் வாழும் ஸ்தலமே. அப்படியானால் "**ஆத்மீக பிள்ளைகளான எமக்கு எங்கள் தேவனாகிய கர்த்தர் இக்கட்டு நாளிலே அரணான கோட்டை**" என்று **நாகூம் 1:7**இல் எழுதப்பட்டுள்ளது. **உங்கள் ஜீவ கிரீடத்தை திருடுவதற்காக உங்களுக்கு பின்னால்** வரும் திருடன் எனப்படும் சாத்தான் உங்கள் வாழ்க்கைக்கு அல்லது உங்கள் வீட்டிற்கு விரோதமாக பல வித ஆபத்துக்களை வரப்பண்ணி **உங்கள் ஆத்மீக வாழ்வை பின்மாற்றமடையச் செய்ய எத்தனிப்பான்.** ஏனென்றால் **யோவான் 10:10**இல் "**திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்**" என்றெழுதப்பட்டுள்ளது. ஆபத்து நேரத்தில் அரணான கோட்டையாக இருந்து எமக்கும், எம் குடும்பத்தினருக்கும் பாதுகாப்பை அளிப்பார். **பயப்படாதீர்கள்! வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

கிருபை நிறைந்த இயேசுவே! எனது வாழ்க்கைக்கு எது இல்லத்திற்கு நீங்கள் அரணான கோட்டை ஆபத்து நாளில் என்னையும் எனது வீட்டாரையும் அரணான கோட்டையாகி எங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.
இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்." (யோவான் 10:9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜனவரி
15 ஞாயிறு

**உபத்திரவம் என்னும் அக்கினி சூளையினின்று உங்களை நீங்கலாக்கும் தேவன்!**

வேதவாசிப்பு
2 இராஜாக்கள் அதி: 01-02

**"...அவர் எரிகிற அக்கினிச்சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார்."** (தானியேல் 3:17)

அருமையான தேவ ஜனங்களே! **இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் பட்சிக்கும் அக்கினியான தேவன் இன்றும் உங்களோடிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்வதினால் நீங்கள் கலங்காதீர்கள்!** மேலே கூறப்பட்ட **தானியேல் 3:17**இல் இன்று எழுதப்பட்டிருப்பதைப் போன்று எரிகிற அக்கினிச் சூளைக்கும் எம்மை நீங்கலாக்கி விடுவிக்க வல்லவரான ஜீவிக்கின்ற தேவன் இன்றும் உங்களோடிருப்பதை விசுவாசித்து நாளை ஆரம்பியுங்கள்.

தேவ பிள்ளைகளே! "**பாபிலோனிய இராஜாவாகிய நேபுகாத்நேச்சர் அறுபது முழ உயரமும் அறு முழ அகலமுமான ஒரு பொற்சிலையைப் பண்ணுவித்து பாபிலோனியாவில் தூரா எனும் சமபூமியில் நிறுத்தியதாக**" தேவ வசனம் கூறுகின்றது. சகல ஜனங்களும் இராஜாவின் கட்டளைக்கிணங்கி ஒரே நேரத்தில் பொற்சிலைக்கு முன்பாக தாழ விழுந்து பணிந்துக் கொண்டார்கள். ஆனாலும் எருசலேமிலிருந்து கொண்டு வரப்பட்ட யூதர்கள் **மூவரான சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ இராஜ கட்டளையின்படி பொற்சிலையை தாழ விழுந்து பணிந்து கொள்ளவில்லை ஏனென்றால் அவர்கள் ஜீவிக்கிற தேவனின் தேவ ஊழியர்கள் ஆனாலும் பாபிலோனிய இராஜா கடுங் கோபங் கொண்டு எரிகிற அக்கினிச் சூளையில் போடும்படியாகக் கூறினான். ஆனாலும் யூத மனிதர்கள் மூவரும் பயமற்று அவர்களது தேவன் அவர்களை மீட்டுக் கொள்வார் இராஜாவிடம் கூறினார்கள்.**

தேவ பிள்ளைகளே! உங்கள் வாழ்வில் நீங்கள் முகங் கொடுக்க வேண்டிய பிரச்சினைகள், சவால்கள், உபத்திரவங்கள் காரணமாக **நீங்களும் அக்கினிச் சூளையின் மத்தியில் இருப்பதைப் போன்று உணர்கிறீர்களா? ஆனாலும் பயப்படாதீர்கள்! சூளையைச் சாதாரணமாக சூடாக்குவதைப் பார்க்கிலும் ஏழு மடங்கு அதிகமாய்ச் சூடாக்கும்படி இராஜா உத்தரவு கொடுத்தான். அதிலிருந்து யூதர் மூவரையும் விடுவித்த இஸ்ரவேலின் தேவன் இன்று ஜீவனுள்ளவராக உங்களோடிருக்கிறார்.** நீங்கள் இயேசுகிறிஸ்துவின் நாமத்தைக் கூறி அவரிடமே உங்கள் பிரச்சினைகளைக் கூறுங்கள். அவரே உங்களை விடுதலையாக்குவார். "**இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து அவர் வசனத்தின்படி நடக்கும் போது உங்களின் பெயர் ஜீவ புத்தகத்தில் எழுதப்பட்டிருக்குமல்லவா? குறிக்கப்படாத அனைவரும் நித்திய ஜீவனைப் பெறாது நித்திய அக்கினிக் கடலில் தள்ளப்படுவான்**" என்றும் **(வெளிப்படுத்தல் 20:15) என்று** எழுதப்பட்டுள்ளது. உங்களை நித்திய நரகாக்கினியிலிருந்து மீட்ட இஸ்ரவேலின் தேவன் அவரது திருக்குமாரனான இயேசுகிறிஸ்துவின் மூலம் எரிகிற அக்கினிச் சூளை போல பிரச்சினைகள் யாவற்றிலுமிருந்து **உங்களை மீட்டுக் கொள்வார். தைரியமாயிருங்கள்! வெற்றிச் சிறந்த நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் பட்சிக்கும் அக்கினியான தேவன்! உங்கள் பிள்ளைகளை சூழ உபத்திரவ, பிரச்சினை அக்கினி பற்றி எரிகிறதா அதற்கு மத்தியில் எங்களை விடுதலைப்படுத்த என் தேவன் வல்லவராயிருக்கிறார் உமக்கு நன்றி! இனிவரும் எல்லா பிரச்சினைகளிலும் காத்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன்; நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை; நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய்; அக்கினிஜுவாலை உன்பேரில் பற்றாது." (ஏசாயா 43:2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜனவரி
16 திங்கள்

மாசற்ற
உள்ளம் மன
உறுதியைத் தரும்!

வேதவாசிப்பு
2 இராஜாக்கள்
அதி: 03-04

**"என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக்கூடும்?..."**
(பரி.யோவன் 8:46)

தேவ பிள்ளைகளே! **ஜீவனுள்ளவரும், மகிமையின் நம்பிக்கையை எமக்களித்தவருமான இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இன்றைய தினத்திலும் தேவ வார்த்தைகள் உங்களை பரிசுத்த பாதையில் வழிநடத்தும்படியாக வாழ்த்துகின்றேன்.** தேவனுடைய ஒரே குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக் கொண்டவர்களான நாம் அவரது பிள்ளைகளுக்குரிய சுயாதீனத்தையும், தேவ ஆவியான தேற்றரவாளன் என்னும் **தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளக் கூடிய உன்னத வரப்பிரசாதத்தையும் பெற்ற நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாவோம்**!

தேவ பிள்ளைகளே! **பரலோக பிதாவானவரால் எமக்கருளப்பட்ட பரிசுத்த தேவ ஆவியானவரால் எமக்கு வல்லமை உண்டாயிருக்கிறது என்பதை ஏற்றுக் கொள்கிறீர்களா?** அது எவ்வாறான வல்லமை என நீங்கள் எண்ணக் கூடும். பரிசுத்த வேதாகமத்தில் **அப்போஸ்தலர் 1:8**இல் இயேசுகிறிஸ்து தம் சீஷர்களுக்கு கூறியிருக்கிறார் "**பரிசுத்தாவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைந்து**"... என்றும் **2தீமோத்தேயு 1:7**இல் "**தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல் பலமும், அன்பும், தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார் என்று பவுல் அடிகளார் கூறியிருக்கிறார்.**" ஆகையால் எமக்கருளப்பட்ட தேவ ஆவியானவர் மூலம் எம் ஆத்துமாவிலே பலமும், திடமும், ஆளுகையையும் பெற்றவர்களாயிருக்கிறோம்.

தேவ பிள்ளைகளே! **பரி.யோவான் 8:46**இல் மேலே தரப்பட்ட பிரதான வசனம் இது தம்மிடம் வந்த யூதர்களிடம் இயேசுகிறிஸ்து கூறியதாகும் "**என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக் கூடும்? நான் சத்தியத்தை சொல்லியிருக்க நீங்கள் ஏன் என்னை விசுவாசிக்கிறதில்லை**" என்பதாக. ஆண்டவர் பரிசுத்தாவியின் வல்லமையினால் புவியில் அவதரித்தவராய் இருப்பதால் அவர் மாசற்றவராவார். **நாம் கிறிஸ்துவின் பிள்ளைகளாயிருப்பதால் உலக மனிதர்களின் மத்தியில் ஆத்மீக வாழ்விற்கு எதிராக சோதனைகளை ஏற்படுத்தும். சத்துருவுக்கு முன்பாக பயமின்றி திடமனதோடு எதிர்த்து நிற்க முடியும்.** நாம் குற்றமற்றவர்களாயும், பரிசுத்தர்களாகவும் காணப்பட்டால் மாத்திரமே, ஆகையால் சாத்தானுடைய சோதனைகளுக்கு, சூழ்ச்சிகளுக்கு இடங்கொடாமல் ஜாக்கிரதையாக இருங்கள். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சாத்தானால் பரீட்சிக்கப்பட்டார் என **பரி.மத்தேயு 4:1**இல் வெளிப்படுத்துகிறது. **இச் சோதனையில் நம் இயேசுகிறிஸ்து தேவனுடைய வார்த்தைகளினால் ஜெயம் பெற்று கொண்டார் என கூறப்பட்டுள்ளது. அதே போல் நீங்களும் ஜெயம் பெறலாம்.** ஆகையால் **உங்கள் சிந்தனையில் கூட பாவத்திற்கு இடமளியாது, குற்றமற்ற உள்ளத்திற்கூடாய் திடமனதுடன் ஜெயம் பெறுங்கள். ஜெயத்தின் நாள்!**

ஜெபம்

இரக்கம் நிறைந்த தேவனே! நீங்கள் பரிசுத்தமுள்ள தேவனாயிருக்கிறபடியால் உமக்கேற்ற பரிசுத்தமான வாழ்வை வாழ எனக்கு உதவி செய்தருளுமாறும், குற்றமற்ற உள்ளத்தோடு உமக்கு பிரியமானபடி வாழ கிருபையளிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்."
(யாக்கோபு 4:7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜனவரி
17 செவ்வாய்

தேவனுக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்!

வேதவாசிப்பு
2 இராஜாக்கள் அதி: 05–06

**"துன்மார்க்கனோ நன்றாயிருப்பதில்லை; அவன் தேவனுக்கு முன்பாகப் பயப்படாதிருக்கிறபடியால், நிழலைப்போலிருக்கிற அவனுடைய வாழ்நாள் நீடித்திருப்பதுமில்லை."** (பிரசங்கி 8:13)

அன்பான தேவ பிள்ளைகளே! சேனைகளின் கர்த்தரும், மகிமையின் ராஜாவுமான **இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இன்றும் சந்தோஷம் நிறைந்த நாளாக அமைய வாழ்த்துகின்றேன். நீதிமானாய் விளங்கும் மனிதனுக்கு சகலமும் நன்மைக்கேதுவாய் நடக்கும். ஏனெனில் நீதிமானுடைய நீதியின் நிமித்தம் அவனுக்கு நன்மையான பிரதிபலன் கிடைக்கும். துன்மார்க்கரின் அநீதியின் நிமித்தம் தீமையான பிரதிபலன் கிடைக்கும்.** ஆகவே அவனவனது கிரியைகளுக்கு தகுந்த பிரதிபலன் கிடைக்குமென்பதை மிகத் தெளிவாக விளங்குகிறதல்லவா? **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!**

தேவ பிள்ளைகளே! **ஆத்மீகர்களாகிய நாம் இயேசுகிறிஸ்துவிடம் கொண்ட விசுவாசம் எம்மை நீதிமான்களாய் விளங்கச் செய்கிறது.** ஏனெனில் **"நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள் போல இருக்கிறோம், எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தை போல இருக்கிறது. நாங்கள் அனைவரும் இலைகளைப் போல உதிருகிறோம். எங்கள் அக்கிரமங்கள் காற்றைப் போல் எங்களை அடித்துக் கொண்டு போகிறது"** என்று **ஏசாயா 64:6**இல் கூறப்பட்டுள்ளது. தேவனால் நீதிமானாக்கப்பட்ட **நாம் பாக்கியவான்கள்!** இன்றைய பிரதான தேவ வார்த்தையில் எழுதப்பட்டிருக்கிறது **துன்மார்க்கனோ நன்றாயிருப்பதில்லை அவன் தேவனுக்கு முன்பாக பயப்படாதிருக்கிறபடியால் நிழலைப் போலிருக்கிற அவனுடைய வாழ் நாள் நீடித்திருப்பதுமில்லை.**

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! தேவ வார்த்தையின்படி துன்மார்க்கமாய் வாழ்கிறவன் தேவனுக்கு பயப்படாதவனாய் இருக்கிறான். **"அவனுக்கு நன்மையான காரியங்கள் வாய்ப்பதில்லையென்றும். நிழலைப் போலிருக்கிற அவனுடைய வாழ் நாள் நீடித்திருப்பதுமில்லை"** என்றும் வெளிப்படுகிறது. ஆகையால் நாமெல்லாரும் தேவனுக்கு பயந்து வாழ வேண்டும். **நான் தேவனுக்குப் பயந்து வாழ்வதைப் போலவே என் மனைவி, பிள்ளைகளும் தேவ பயம் உள்ளவர்களாய் வாழ்கிறார்கள். அப்பொழுது நம் வாழ்வில் நன்மைகளையேயன்றி தீமைகள் நேரிடுவதில்லை.** நாங்கள் நோயற்றவர்களாய் சந்தோஷமாய், சமாதானமாய் வாழ்கிறோம். நீங்களும் தேவ பயத்துடன் வாழும்படியாக இன்றிலிருந்து தேவ வசனங்களை வாசித்தறிந்து கொள்ளுங்கள். ஏனெனில் **நீதிமொழிகள் 1:7**இல் கூறுகிறது **"கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்...."** என்று. ஆகையால் ஜீவனுள்ள தேவ வார்த்தைகளின் மூலம் ஞானத்தை பெறும் போது தேவ பயம் உங்களில் ஏற்படும். தேவபயம் உள்ளவர்களாய் வாழ்ந்து நன்மைகளை சுதந்தரித்துக் கொள்ளுங்கள். **உங்களை நன்மைகளால் நிரப்பும் ஆசீர்வாதமான நாள்!**

ஜெபம்

வல்லமை நிறைந்த கர்த்தாவே! நான் தேவ பயத்தோடு வாழும் போது எம் வாழ்க்கையில் நன்மையான ஆசீர்வாதங்களையும், என் ஆயுசு நாட்களையும் அதிகரித்துக் கொண்டு நன்மையான ஈவுகளைப் பெற்று ஆசீர்வாதமான வாழ்வை வாழ என்னை ஆசீர்வதித்து வழிநடத்தியருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்.

–ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"தாழ்மைக்கும் கர்த்தருக்குப் பயப்படுதலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும் மகிமையும் ஜீவனுமாம்." (நீதிமொழிகள் 22:4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜனவரி
18 புதன்

உங்களை
ஆக்கினைக்குள்ளாக்காத
அன்பு தெய்வம்
இயேசு!

வேதவாசிப்பு
2 இராஜாக்கள்
அதி: 07–08

**"அதற்கு அவள்: இல்லை, ஆண்டவரே, என்றாள். இயேசு அவளை நோக்கி: நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை; நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே என்றார்."** (பரி.யோவான் 8:11)

கர்த்தருக்கு பிரியமான தேவ பிள்ளைகளே! ஜீவனுள்ள தேவனாகிய கர்த்தர் உங்கள் வாழ் நாளெல்லாம் துணையாய் நின்று கரம் பிடித்து நடத்துவார். ஆண்டவராகிய **இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு அவரை முழு இருதயத்துடன் விசுவாசித்து வாழும் நீங்கள் பேறு பெற்றவர்கள்.** ஏனெனில் ஆண்டவராகிய **இயேசுகிறிஸ்து ஜனங்களை மிகவும் நேசிக்கிறார்.**

தேவ பிள்ளைகளே! எம் ஆண்டவராகிய **இயேசுகிறிஸ்து பலமுள்ளவனுக்கும், பலமில்லாதவனுக்கும் மிகுந்த கரிசனையோடு உதவி செய்கிறவராவார். அவரது ஒரே குமாரனாகிய இயேசுகிறிஸ்து இவ்வுலகில் அவதரித்து வாழ்ந்த காலத்தில் தம் சொந்த சீஷர்களிடம் என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள்,** இது முதல் நீங்கள் அவரை அறிந்தும் கண்டும் இருக்கிறீர்கள் என்றார். **இது பரி.யோவான் 14:7**இல் குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து **"பிதாவும், குமாரனும் இருவரும் ஒருவரே என்பது தெளிவாக விளங்குகிறதல்லவா?"** பிதாவானவர் தம் மகிமையுடன், வல்லமையுடன் இத்தரணியில் மனிதர்கள் மத்தியில் வெளிப்பட முடியாதபடியால் சொந்த குமாரனாகிய இயேசுகிறிஸ்துவாக இப் புவியில் வெளிப்பட்டார்.

தேவனுடைய பிள்ளைகளே! இன்றைய எம் பிரதான தேவ வசனத்தில் **"விபச்சாரியாக வாழ்ந்த ஒரு பெண்ணிடம் இயேசுகிறிஸ்து கூறிய வார்த்தைகளாகும். வேதபாரகரும், பரிசேயரும் விபசாரத்தில் கண்டு பிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரியை இயேசுவினிடத்தில் கொண்டு வந்து நிறுத்தி போதகரே இந்த ஸ்திரி விபசாரத்தில் கையும், மெய்யுமாகப் பிடிக்கப்பட்டாள். இப்படிப்பட்டவர்களைக் கல்லெறிந்து கொல்ல வேண்டுமென்று மோசேயின் நியாயப்பிரமாணத்தில் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறாரே நீர் என்ன சொல்லுகிறீர்"** என்றார்கள். அவர் மேல் குற்றஞ் சுமத்துவதற்கான காரணம் உண்டாகும் பொருட்டு அவரைச் சோதிக்கும்படி இப்படிச் சொன்னார்கள். **"இயேசுவோ உங்களில் பாவமில்லாதவன் இவள் மேல் முதலாவது கல்லெறியக்கடவன் என்று கூறினார். இதைக் கேட்டவர்கள் ஒவ்வொருவராய் போய் விட்டார்கள். இயேசுகிறிஸ்து அப்பெண்ணிடம் ......ஸ்திரீயே உன் மேல் குற்றம் சாட்டினவர்கள் எங்கே ஒருவனாகிலும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவில்லை என்றார். அதற்கு அவள் இல்லை ஆண்டவரே என்றாள் இயேசு அவளை நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை நீ போ இனிப் பாவஞ் செய்யாதே என்றார்."** இன்றும் உங்கள் பலவீனத்திலே தேவன் உங்களண்டையில் இருக்கிறார். அதிலிருந்து விடுதலைப்படுத்தும்படியாக கர்த்தர் உபகாரம் செய்வார். **உங்கள் பெலவீனத்திலே தேவனை தேடுங்கள். ஜெயம் தரும் நாள்!**

ஜெபம்

அன்பின் பரலோகப் பிதாவே! என் பெலவீனத்தில் உலக மனிதர்கள் என்னை நிந்தனைக்கும், வேதனைக்கும் உட்படுத்தி வெட்கப்படுத்துகிறார்கள். இப்படியான சந்தர்ப்பங்களில் நீர் எங்களோடிருந்து நிந்தைகளை நீக்கி எங்களை ஆசீர்வதிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேதத் வாக்குத்தத்தம்

"தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்."
(நீதிமொழிகள் 28:13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜனவரி
19 வியாழன்

பாவத்துக்கு பயப்படுங்கள்
குற்றஞ் சுமத்தினால்
பயப்படாதிருங்கள்!

வேதவாசிப்பு
2 இராஜாக்கள்
அதி: 09-10

**"இயேசு நிமிர்ந்து அந்த ஸ்திரீயைத்தவிர வேறொருவரையுங் காணாமல்: ஸ்திரீயே, உன்மேல் குற்றஞ்சாட்டினவர்கள் எங்கே? ஒருவனாகிலும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவில்லையா என்றார்."** (பரி.யோாவன் 8:10)

அன்பான தேவ பிள்ளைகளே! இப் பூமியில் வாழும் சகல மனிதர்களுக்காகவும் **தமது பரிசுத்த இரத்தத்தை சிந்தினார் என விசுவாசிக்கும் சகலரதும் பாவ சாபங்களை நீக்கி மன்னிப்பையருளும் ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இன்று உங்களுக்கு மகிழ்ச்சிகரமான நாளாக அமைய வாழ்த்துகின்றேன்.** ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து எமது பரலோக பிதாவின் அன்பை எமக்கு வெளிப்படுத்தும்படியாய் இப் பூமிக்கு அவதரித்தபடியால் மனிதர்களின் தராதிரத்தை பார்க்காதவராய் யாவருக்கும் ஒரே விதமான அன்பை பொழிகிறார். **இயேசுகிறிஸ்துவின் அன்பை ருசித்து பார்க்கும் நீங்கள் மிக அதிர்ஷ்டசாலிகள்**!

தேவ பிள்ளைகளே! இன்றைய எம் பிரதான வசனங்கள் உள்ளடங்கிய **பரி.யோவான் 8:10-11**வரை வாசித்து பாருங்கள் **"விபசாரத்தில் கண்டு பிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீயை பிடித்து பரிசேயர் இயேசுகிறிஸ்துவிடம் கொண்டு வந்து நிறுத்தி அவர் மேல் குற்றஞ் சுமத்துவதற்காக அவர் என்ன சொல்லுகிறார் என அறியும்படி இப்படிப்பட்டவர்களை கல்லெறிந்து கொல்ல வேண்டுமென்று மோசேயின் நியாயப்பிரமாணத்தில் நமக்கு கட்டளையிட்டிருக்கிறாரே நீர் என்ன சொல்லுகிறீர் என்று கேட்டார்கள்"**. இயேசுவோ உங்களில் பாவமில்லாதவன் இவள் மேல் முதலாவது கல்லெறியக்கடவன் என்று கூறினார். இதைக் கேட்டு பெரியோர் முதல் சிறியோர் வரைக்கும் ஒவ்வொருவராய் போய் விட்டார்கள். இயேசு தனித்திருந்தார்.

தேவ பிள்ளைகளே! **"இயேசு நிமிர்ந்து அந்த ஸ்திரியிடம் உன்னை குற்றஞ்சாட்டினவர்கள் எங்கே? உன்னை ஒருவனாகிலும் ஆக்கினைக்குள்ளாகக் தீர்க்கவில்லையா?"** என்றார். அதற்கு அவள் இல்லை ஆண்டவரே என்றாள். **"இயேசு அவளை நோக்கி நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை நீ போ இனிப் பாவஞ் செய்யாதே"** என்றார். எங்கள் அன்பான இயேசுகிறிஸ்து அந்த பாவியான ஸ்திரியை வெறுக்கவில்லை. ஆனால் அவளுடைய பாவத்தையே வெறுத்தார். இன்றும் உலக மனிதர்கள் மற்ற மனிதனுடைய பலவீனமான குறைகள், சிறு பிழைகளை கண்டவுடன் அதைக் குறித்து ஏளனம் **செய்யத் தொடங்கி விடுவார்கள். குற்றம் சுமத்துவார்கள் ஆனால் அவர்களுடைய பலவீனத்தை நீக்கவோ, குறைகளை நிறைவாக்கவோ, பிழைகளை சீர்ப்படுத்தவோ முயற்சிக்கமாட்டார்கள். நல்வழியில் உங்களை கொண்டு செல்ல முற்படமாட்டார்கள்.** ஆனால் நீங்கள் அவ்வாறு நடவாதீர்கள். இயேசுவின் அன்பை அறிந்த நீங்கள் இப்படி புறம்பே தள்ளப்பட்டவர்களை இயேசுவண்டை அழைத்து வந்து இயேசுவின் வழியிலே நடத்திச் செல்லுங்கள். **அவர்கள் வாழ்வில் மறுமலர்ச்சியை பெறச் செய்யுங்கள். மகிழ்ச்சிகரமான நாள்**!

ஜெபம்

கிருபை நிறைந்த தேவனே! எம் பாவங்களின் நிமித்தம் உங்கள் குமாரனை இவ்வுலகிற்கு அனுப்பினீர்கள் அவரை விசுவாசித்தபடியால் என் பாவம் நீங்கிற்று என் பாவத்தை வெறுத்தவர் என்னை வெறுக்காதபடியால் நன்றி! எம்மையும் உம்முடைய செம்மையான வழியிலே வழி நடத்தியருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்.

~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்."
(ரோமர் 6:23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜனவரி

20 வெள்ளி

நீங்கள் இயேசுகிறிஸ்துவின் உரிமையுள்ள பிள்ளைகள்!

வேதவாசிப்பு

2 இராஜாக்கள் அதி: 11–12

**"அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்."** (பரி.யோவான் 1:12)

எனக்கன்பான தேவ பிள்ளைகளே! **அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்த ஜீவனுள்ள தேவனின் உயர்ந்த நாமத்தினால் இன்றும் உங்களுக்கு ஆசீர்வாதமான நாளாக வேண்டுமென வாழ்த்துகின்றேன்.** பரலோக தேவனுடைய புத்திர சுவீகார ஆவியின் பிள்ளைகளாகிய **நீங்கள் மிக பாக்கியவான்கள்**! அவர் உங்களது சிருஷ்டிகரான பரலோக பிதாவாக இருப்பதால் உங்களை குறித்ததான சகல காரியங்களையும் அறிந்துள்ளார். **உங்கள் வாழ்க்கையின் தேவைகள் என்ன? என்பதெல்லாம் அவர் நன்கு அறிந்தவரானபடியால் ஏற்ற வேளையில் அவைகள் உங்களை வந்து சேரும்படியாக கிரியை செய்வார்.**

தேவ பிள்ளைகளே! **சங்கீதம் 104:25,27,28**ம் வசனங்களில் "**பெரிதும் விஸ்தாரமுமான இந்தச் சமுத்திரமும் அப்படியே நிறைந்திருக்கிறது. அதிலே சஞ்சரிக்கும் சிறியவைகளும், பெரியவைகளுமான எண்ணிறைந்த ஜீவன்கள் உண்டு. ஏற்ற வேளையிலே ஆகாரத்தை தருவீர் என்று அவைகளெல்லாம் உம்மை நோக்கிக் காத்திருக்கும். நீர் கொடுக்க அவைகள் வாங்கிக் கொள்ளும். நீர் உம்முடைய கையைத் திறக்க அவைகள் நன்மையால் திருப்தியாகும்**" என்றும், **பரி.மத்தேயு 10:29,30,31**இல் "**ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவா? ஆயினும் உங்கள் பிதாவின் சித்தமில்லாமல் அவைகளின் ஒன்றாகிலும் தரையிலே விழாது. உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது.**" ஆதலால் **பயப்படாதிருங்கள்**! **அநேக அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்.**

தேவ பிள்ளைகளே! சமுத்திரத்தின் சஞ்சரிக்கும் மச்சங்களைக் குறித்தும், வானத்தின் பறக்கும் பட்சிகளிலேயே மிகச் சிறிய பறவையாகிய அடைக்கலான் குருவியைக் குறித்து, பிதாவானவருடைய கவனம் இருக்குமாகில் **அவரது சொந்த பிள்ளைகளாக உலகிலிருந்து வேறு பிரித்துக் கொண்ட எம்மைக் குறித்து கவனம் வைக்காதிருப்பாரோ?** தேவ பிள்ளைகளே! நீங்கள் அவருக்கு சொந்தமாயிருப்பதால் **நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகள்**! ஆவீர்கள். **நீங்கள் உங்களைக் குறித்து ஒரு போதும் தாழ்வாக எண்ணி மனகலக்கமடையாதீர்கள். பரி.யோவான் 1:12**இல் "**....தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்** என்று எழுதப்பட்டுள்ளது. **முழு இருதயத்தோடு அவரை விசுவாசிக்கிறோமா? எவ்வளவாக அவர் முகத்தை ஆவலோடு தேடுகிறோமோ அந்தளவுக்கு அவரோடு உங்கள் ஆத்துமா ஐக்கியம் கொள்ளும்.** அப்போது உங்கள் நடைமுறையில் செயல்படுகின்றவைகள் அவருக்கு பிரியமானபடி இருக்கின்றதா? என்பதை நன்கு அறிந்துக் கொள்ளலாம். **நீங்கள் நூற்றுக்கு, நூறு வீதம் உங்கள் உரிமையை அனுபவியுங்கள். ஆசீர்வாதமான நாள்**!

ஜெபம்

என் தேவனே! என்னை உங்கள் சொந்த பிள்ளையாக மாற்றினபடியால் நன்றி! அப்பா பிதாவே நூற்றுக்கு நூறுவீதம் உங்கள் சொந்தத்தை நான் அநுபவிக்கும்படியாக உங்கள் கிருபை தயவு எனக்கருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்.

–ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்; நீ புத்திரனேயானால், கிறிஸ்துமூலமாய்த் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய்." (கலாத்தியர் 4:7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜனவரி
21 சனி

உங்கள் நினைவுகளை அறிந்த தேவன்!

வேதவாசிப்பு
2 இராஜாக்கள் அதி: 13-14

**"இயேசு அவர்கள் நினைவுகளை அறிந்து: நீங்கள் உங்கள் இருதயங்களில் பொல்லாதவைகளைச் சிந்திக்கிறதென்ன?"** (பரி.மத்தேயு 9:4)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! உங்கள் இருதயத்தின் நினைவுகளை நன்றாக புரிந்துக் கொள்ளும் மீட்பரான **ஜீவமன்ன தேவன் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இன்றும் உங்களுக்கு நல்ல நாளாக** அமைய வாழ்த்துகின்றேன். **எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து எம் சிந்தனைகளை அறிந்தவராய் இருப்பதால், எம் ஒவ்வொருவரைக் குறித்தும் நன்கு புரிந்து வைத்துள்ளார்.** ஒரு மனிதனுடைய உள் மனதில் இருப்பவைகளை இன்னுமொரு மனிதனால் அறிந்து கொள்ள முடியாது. அதனால் தான் ஒருவரோடு ஒருவர் நட்பைப் பகிர்ந்து கொள்ளும் போது பிரச்சினை ஏற்படுகிறது.

தேவனுடைய பிள்ளைகளே! நீங்கள் அதிகாலையில் நித்திரை விட்டெழுந்த வேளையிலிருந்து அந்த நாள் முடியும் வரையிலும் நீங்கள் செய்த காரியங்கள் என்னென்ன? உங்கள் குறிக்கோள் என்ன? என்பதை இயேசுகிறிஸ்து நன்கறிவார். மனிதர்களை விட அவர் உங்களை நன்கறிந்து வைத்திருப்பதால் **அவர் உங்களை விசாரிக்கிறவராய் கரிசனையுடன் இருக்கிறார். 1பேதுரு 5:7**இல் குறிப்பிடப்பட்டுள்ளது. **"அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்து விடுங்கள்"** என்பதாக. ஆகையால் உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக! இன்றைய தின மன்னா நாளிதழின் தேவ செய்தியை வாசிக்கிற தேவ பிள்ளைகளே ஆரம்பித்தலிருந்தே தேவன் உங்களோடு பேசுகிறார்.

தேவ பிள்ளைகளே! **சங்கீதம் 139:1,2,3**யை வாசித்துப் பாருங்கள். தாவீது ராஜா கூறுகிறார் **"கர்த்தாவே நீர் என்னை ஆராய்ந்து அறிந்திருக்கிறீர், என் உட்காருதலையும் என் எழுந்திருத்தலையும் நீர் அறிந்திருக்கிறீர். என் நினைவுகளை தூரத்திலிருந்து அறிகிறீர். நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னைச் சூழ்ந்திருக்கிறீர். என் வழிகளெல்லாம் உமக்குத் தெரியும்"** என்பதாக. இப்படியாயின் ஆண்டவர் உங்களைக் குறித்தும், **உங்கள் நினைவுகளைக் குறித்தும் அறியாதிருப்பாரோ?** தாவீதின் தேவனானவரும் எம் சிருஷ்டிகரான கர்த்தர் தாமே தமது குமாரன் இயேசுகிறிஸ்து மேலே குறிப்பிட்ட வேத வசனத்தின்படி **பரி.மத்தேயு 9:4**இன்படி எம் நினைவுகளை நன்கறிவார். ஆகையால் **உங்கள் சிந்தனையை எப்போதும் தேவனுக்கு பிரியமானதாய் காத்துக் கொள்ளுங்கள். உங்கள் நினைவுகள் பரிசுத்தமாய் இருக்கட்டும்.** அப்போது பலத்த ஆசீர்வாதத்திற்குரியவராவீர்கள். **பரி.மத்தேயு 5:8**இல் கூறுகிறது. **"இருதயத்தின் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனை தரிசிப்பார்கள்"** என்பதாக, இருதய சிந்தனைகளை பரிசுத்தப்படுத்தி தேவனுக்கு பிரியமுள்ளவர்களாக வாழ்ந்து தேவனைத் தரிசிக்கும் பாக்கியத்தைப் பெறுங்கள். **கிருபையின் நாள்!**

ஜெபம்

என் இயேசுவே! நீங்கள் படைப்பின் தேவனாயிருந்தும் இயேசுகிறிஸ்துவாய் உலக மனிதர் மத்தியில் அவதரித்தீர்கள் இன்றும் எம் நினைவுகளை ஆராய்ந்தறிந்து குறைவுகளை நிறைவாக்கி ஆசீர்வதித்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்.

~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"மனதின் யோசனைகள் மனுஷனுடையது; நாவின் பிரதியுத்தரம் கர்த்தரால் வரும்." (நீதிமொழிகள் 16:1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜனவரி
22 ஞாயிறு

நீங்களும் கனி
தரும் திராட்சை
செடியாய் மாறுங்கள்!

வேதவாசிப்பு
2 இராஜாக்கள்
அதி: 15–16

**"நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத்தோட்டக்காரர். என்னில் கனிகொடாதிருக்கிற கொடிஎதுவோ, அதை அவர் அறுத்துப்போடுகிறார்;..."**
(பரி.யோவான் 15:12)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற தேவன் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இன்றைய நாளில் கர்த்தருடைய வார்த்தைக்கு செவி கொடுத்து உள்ளத்திலே சந்தோஷத்தையும் வாழ்வினிலே ஜெயத்தையும் பெறும்படி வாழ்த்துகின்றேன்.** கிறிஸ்து இயேசுவுக்குள்ளாய் கனி தரும் வாழ்விற்காக **உங்களை அழைத்த தேவனானவர் இன்றும் உங்களோடிருக்கிறார்.** ஆகையால் எம் மீட்பர் இயேசுகிறிஸ்துவுக்குள்ளாய் அதிக கனி தரும்படியாய் கிரியை செய்கிறவராயிருக்கிறார்.

தேவ பிள்ளைகளே! மேலே குறிப்பட்ட ஜீவ வார்த்தையில் ஆண்டவர் மெய்யான திராட்சை செடி என குறிப்பிடப்பட்டிருக்கிறது. "**பிதாவானவர் திராட்சைத் தோட்டக்காரராகவும், அதின் சொந்தக்காரர்**" என்றும் எழுதப்பட்டுள்ளது. இன்னுமாய் **திராட்சைக் கொடியின் கிளைகள் எல்லாம் கனிகளால் நிறைந்திருப்பதை காணவே தேவன் விரும்புகிறார்.** அப்படியல்லாது அதாவது **திராட்சை கொடிகளின் கிளைகள் கனி இல்லாதவைகளை அவர் அறுத்துப் போடுகிறார்.** ஆயினும் "**கனி கொடுக்கிற கொடி எதுவோ அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி அதைச் சுத்தம் பண்ணுகிறார்**" என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களாய் இருப்பதால் பரலோக பிதாவின் பிள்ளைகளாய் இருக்கிறோம். ஆகையால் இவ் தேவ வசனத்தின் பிரகாரம் **இயேசுகிறிஸ்து எமக்கு கற்று கொடுத்ததின்படி நாம் அனைவரும் அவரில் நிலைத்திருக்க வேண்டும்.**

தேவ பிள்ளைகளே! நாம் கிறிஸ்துவின் பிள்ளைகளாய் இருக்கும்படி பட்சத்தில் நாம் அவரில் ஜீவிக்க முடியும். ஏனெனில் **அவர் திராட்சைச் செடியாயின் அவரின் பிள்ளைகளாகிய நாம் அதன் கிளைகளாவோம். கிளைகள் எப்போதும் கொடியோடு தொடர்புடையதாகவே** இருந்தால் அதில் **கனிகள் உருவாகும்.** அதே போல் நாம் கிறிஸ்து இயேசுவோடு வாழ்வோமாகில் **அதன் மூலம் எம் வாழ்விலும் நிறைவான கனிகளைக் கொடுக்க முடியும். இதில் திராட்சைக் கனி என்பது ஆவிக்குரிய கனிகளையே குறிக்கிறது. கலாத்தியர் 5:22,23**இல் "**ஆவிக்குரிய கனிகள் ஒன்பதைக் குறித்து கூறப்பட்டுள்ளது.**" நீங்கள் எவ்வளவாய் இயேசுகிறிஸ்துவோடு இணைந்து ஜீவிக்கின்றீர்களோ? அவருக்கு அன்பு செலுத்துகிறீர்களோ? அவ்வளவுக்கு ஆவியானவருக்கூடாய் ஆத்மீக பலனை அதாவது ஆவிக்குரிய கனிகளை பெற்றுக் கொள்ளலாம். "**அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள் முட் செடிகளில் திராட்சைப் பழங்களையும், முட் பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறார்களா?**" என்று **பரி.மத்தேயு 7:16**இல் எழுதப்பட்டிருக்கிறது. நீங்களும் கிறிஸ்துவுக்குள்ளாய் கனி கொடுக்கிறவர்களாக மாறும்படி முயற்சிகளை மேற் கொள்ளுங்கள். **வெற்றிச் சிறந்த நாள்!**

ஜெபம்

ஐசுவரியத்தின் தேவனே! இயேசுகிறிஸ்துவுக்குள்ளாய் கனி தரும் வாழ்வை வாழ்வதே உங்கள் விருப்பம் என்பதை அறிந்தேன். இயேசுவே நானும் கிறிஸ்துவுக்காய் வாழ்ந்து கனிதரும் திராட்சைச் செடியாய் அநேக ஆவியின் கனிகள் கொடுக்க கிருபை செய்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு, அக்கினியிலே போடப்படும்." (பரி.மத்தேயு 7:19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜனவரி
23 திங்கள்

நீங்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறீர்களா?

வேதவாசிப்பு
2 இராஜாக்கள் அதி: 17–18

**"விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்;"** (பரி.மாற்கு 16:17)

கர்த்தருக்குள் பிரியமானவர்களே! **ஜீவனுள்ள தேவனின் பரிசுத்த நாமம் கேடகமாகும். இயேசு என்னும் நாமத்தினால் இன்றும் சுபமே!** இப் பூமியில் வாழும் மனிதர்களிலே **இயேசுகிறிஸ்துவை ஆராதிக்கும் நீங்கள் விஷேசித்தவர்கள்!** ஏனெனில் அவர் வானத்திலும், பூமியிலும் சகல வல்லமையுள்ள தேவனாவார். இதனால் அவரை நாம் ஏற்றுக் கொண்ட நாள் முதல் அவரது **பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளே வாசம் பண்ணுகிறபடியால் அவரது வல்லமையும் அதிகாரமும் எம்மில் உள்ளது.**

தேவ பிள்ளைகளே! பரிசுத்த வேதாகமத்தில் **பரி.மாற்கு 16:17**இல் **"இயேசுகிறிஸ்து சீஷரிடத்தில் வெளிப்படுத்துகிறார் விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன என் நாமத்தினால் பிசாசுகளை துரத்துவார்கள்"**... என்பதாக. ஆயினும் **நான் எப்படி அசுத்த ஆவிகளை துரத்துவது அது இயேசுவின் வேலையல்லவா? என நீங்கள் எண்ணக் கூடும். ஆனாலும் தேவ பிள்ளைகளே! அப்படி எண்ணாதிருங்கள்.** இவ் வாக்கியத்தில் எழுதப்பட்டிருக்கிறது **விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன** என்றல்லவா? நீங்களும் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறீர்கள் அல்லவா? அவர் தேவ குமாரன் என்பதை முழு உள்ளத்தோடு விசுவாசிப்பீர்களேயானால் அவர் உலக மக்களின் பாவங்களுக்காய் மனித உருவிலே **இப்பூமியில் தோன்றி சிலுவையிலே எமக்காய் தம் உயிரை பலியாக ஒப்புக் கொடுத்து மறுபடியும் மூன்றாம் நாள் ஜீவனுடன் எழுந்தார். இன்றும் ஜீவனுள்ளவராய் இருக்கிறார் என்று முழு இருதயத்துடன் விசுவாசிப்பீர்களேயானால் உங்களால் இயேசுவின் நாமத்தைக் கொண்டு சாத்தானை துரத்த முடியும்.**

தேவ பிள்ளைகளே! உங்கள் சரீர நலனுக்கு விரோதமாய் உங்கள் பொருளாதாரத்தில் வீழ்ச்சியை உண்டு பண்ணும். **உங்கள் வீட்டாரின் வாழ்விலே அநேக பாதிப்புகளை உருவாக்கும் அந்தகார வல்லமைகள், இறந்தோரின் ஆவிகள், பிசாசின் கட்டுகள், சூனியம், செய்வினை, பில்லி போன்ற எல்லா விதமான பிசாசின் கிரியைகளுக்கும் விரோதமாக "இயேசு" என்னும் "நாமத்தினால்" எதிர்த்து நில்லுங்கள்.** ஏனெனில் வேறு எவராலும் விடுதலை இல்லை. ஏனெனில் **அப்போஸ்தலர் நடபடிக்கை 4:12ல்** வசனத்தில் பேதுரு கூறுகிறார் **"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை."** நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை என்பதாக. **நீங்கள் பயப்படாதீர்கள்!** உங்களுக்கு விரோதமாக பிசாசுகளுக்கு விரோதமாக **"இயேசு"** என்னும் **"நாமத்தைக்"** கொண்டு **எதிர்த்து நின்று ஜெயம் பெறுங்கள். ஜெயத்தின் நாள்!**

ஜெபம்

எங்களை படைத்த தேவனே! உங்களை விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என அறிகிறேன். உங்கள் பிள்ளையாகிய எங்களுக்கு சத்தானை மேற் கொள்ள அதிகாரம் கொடுத்தபடியால் உமக்கு நன்றி! சாத்தானின் சகல காரியங்களையும் முறியடிக்க எங்களை வல்லமைப்படுத்தி பெலப்படுத்துமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்."
(பரி.யோவான் 14:12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜனவரி

24 செவ்வாய்

கோணலைச் செவ்வையுமாக்குவேன் என்று வாக்களித்திருக்கும் நித்திய பிதா!

வேதவாசிப்பு

2 இராஜாக்கள் அதி: 19-20

**"...அவர்களுக்குத் தெரியாத பாதைகளில் அவர்களை அழைத்துக்கொண்டுவந்து, அவர்களுக்கு முன்பாக இருளை வெளிச்சமும், கோணலைச் செவ்வையுமாக்குவேன்; இந்தக் காரியங்களை நான் அவர்களுக்குச் செய்து, அவர்களைக் கைவிடாதிருப்பேன்."** (ஏசாயா 42:16)

அருமையான தேவ பிள்ளைகளே! **கண்ணின் மணிபோல் காத்து வழி நடத்தும் ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் நீங்கள் சுக பெலத்துடன் வாழ வாழ்த்துகின்றேன்.** உலக வாழ் மனிதர்கள் இன்னுமொரு மனிதனை விசுவாசித்து எதிர்ப்பார்ப்புகளோடு இருப்பது பலனற்ற காரியம் என புரியாதவர்களாய் இருக்கிறார்கள். ஆயினும் ஆத்மீக தேவ பிள்ளைகளாகிய நீங்களனைவரும் உலகில் ஒரு மனிதரையும் விசுவாசித்து எதிர் பார்த்திருப்பது கூடாத காரியம் என்றும் **மனிதனை உண்டாக்கிய சர்வ வல்லமை பொருந்திய தேவ பிதா மாத்திரமே என்றென்றைக்கும் எதிர்பார்ப்புக்கு உரியவர் என்பதையும் அறிவீர்கள்.**

தேவ பிள்ளைகளே! **மனிதனுடைய வாழ்விலே உள்ளத்திலிருக்கும் அநேக எதிர்பார்ப்புகள் நிறைவேறாமல் போகும் போது அவர்கள் படும் வேதனையினால் வாழ்க்கையே வெறுப்பாக மாறி விடும்.** உயிருடன் வாழ வேண்டும் என்ற ஆசை கூட அற்றுப் போய் விடும். பொதுவாகவே ஒரு மனிதன் இப்புவியில் வாழ்வது ஒரு எதிர்பார்ப்புடன் ஆகும். மனிதர்களின் எதிர்பார்ப்பு தோல்வியடைந்து போகும் போது தற்கொலை செய்ய முயற்சிப்பது இதனால் அல்லவா? ஆயினும் உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக! **சகல ஜாதிகளின் பிதாவாக எண்ணப்படும் ஆபிரகாமிற்கும், அவனுடைய மனைவி சாராளுக்கும் பிள்ளை பேற்றை எதிர்பார்த்திருந்த நாட்கள் எல்லாம் கடந்து போன வேளையில் தேவன் அவர்களுக்கு புதிய எதிர்பார்ப்பை உருவாக்கி அதை நிறைவேற்றாதபடி செய்தாரா? ரோமர் 4:18.**

தேவ பிள்ளைகளே! இன்றும் புதிய எதிர்பார்ப்புகளை உருவாக்கித் தேவன் தருகிறார். **ஏசாயா 46:16**இல் **"....அவர்களுக்கு முன்பாக இருளை வெளிச்சமும் கோணலைச் செவ்வையுமாக்குவேன்"** இந்தக் காரியங்களை நான் அவர்களுக்குச் செய்து அவர்களை கைவிடாதிருப்பேன் என்றுரைத்திருக்கிறார். இருளாய் இருக்கும் பட்சத்தில் எம்மால் எதையும் தெளிவாய் காண முடியாது. அதே நேரம் வெளிச்சமாய் இருந்தால் எல்லாம் தெளிவாகத் தெரியுமல்லவா? அதே போல் **உலகிற்கு ஒளியான இயேசுகிறிஸ்து எம் வாழ்க்கைக்கு சமீபமாகும் போது எம் வாழ்வில் காணப்படும் எல்லாப் பிழைகளும், குறைபாடுகளும், பெலவீனங்களும் அவரால் நீங்கப் பெற்று எம் வாழ்வில் காணப்படும் கோணல்கள் செவ்வையாகும்.** மனிதர்கள் எம்மைக் கைவிட்டாலும் நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஒரு போதும் கைவிடமாட்டார். புதிய எதிர்பார்ப்புகளை பெற்றுக் கொள்ள வாழ்வினை இயேசுவுக்கு அர்ப்பணியுங்கள். **அவர் உங்கள் வாழ்வில் ஒளியாயிருந்து உங்களை மாற்றி ஆசீர்வதிப்பார். ஆசீர்வாதமான நாள்!**

ஜெபம்

சர்வ வல்லமையுள்ள தேவனே! உம்மால் உருவாக்கப்பட்டதால் என்னை குறித்து நன்கு அறிந்த தேவனாயிருக்கிறபடியால் நன்றி! என் ஆத்துமாவில் காணப்படுகின்றதான கோணலானவைகளை செவ்வையாக்கி ஆசீர்வதித்து வழி நடத்தியருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். -ஆமென்-

வேத வாக்குத்தத்தம்

"...சீர்கெட்ட இஸ்ரவேலே, திரும்பு என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் உங்கள்மேல் என் கோபத்தை இறங்கப்பண்ணுவதில்லை; நான் கிருபையுள்ளவரென்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் என்றைக்கும் கோபம் வைக்கமாட்டேன்." (எரேமியா 3:12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜனவரி

25 புதன்

கர்த்தர் சாந்தகுணமுள்ளவர்களை இரட்சிப்பினால் அலங்கரிக்கின்றார்!

வேதவாசிப்பு

2 இராஜாக்கள் அதி: 21–22

**"கர்த்தர் தம்முடைய ஜனத்தின் மேல் பிரியம் வைக்கிறார்; சாந்தகுணமுள்ளவர்களை இரட்சிப்பினால் அலங்கரிப்பார்."** (சங்கீதம் 149:4)

அன்பான தேவ பிள்ளைகளே! வாக்களித்ததை நிறைவேற்றுகிற **ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்து இன்றைய தினமதிலும் நன்மையான ஈவுகளை மகிழ்ச்சியோடு அருள வாழ்த்துகின்றேன்.** எங்கள் தேவனாகிய ஆண்டவர் இஸ்ரவேலின் இரட்சிப்பின் தேவனானவர் ஏனெனில் **ஏசாயா 45:2**இல் அவர் கூறுவதாவது **"...நீதிபரரும் இரட்சகருமாகிய என்னையல்லாமல் வேறே தேவன் இல்லை என்னைத் தவிர வேறொருவரும் இல்லை"** என்பதாக.

தேவ பிள்ளைகளே! அவர் இஸ்ரவேலின் இரட்சிப்பின் தேவனாயினும் எம் தேவனாய் அவர் இருப்பது எப்படி? என்று உங்களுக்கு எண்ணத் தோன்றும் **ஏசாயா 45:2**இல் இதைக் குறித்து எழுதப்பட்டிருக்கிறது என அறிவீர்களா? **"பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே என்னை நோக்கிப் பாருங்கள் அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள் நானே தேவன் வேறொருவரும் இல்லை" உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!** இஸ்ரவேலின் தேவனானவர் உங்கள் தேவனாவார். ஆகையால் **நீங்கள் மிக பாக்கியவான்கள்!** அவர் மீது விசுவாசம் கொண்ட யாவரையும் அவரது சொந்தப் பிள்ளைகளாக உலகத்தோரிலிருந்து பிரித்தெடுத்துக் கொண்டார். அப்படியாக அவரால் வேறு பிரிக்கப்பட்டவர்கள் அவருக்கு சொந்த சம்பத்தாயிருக்கிறார்கள். அவர் சீனாய் மலையிலே மோசேயை அழைத்து கூறினார். **"இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால் சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள் என்னுடையது பூமியெல்லாம் என்னுடையது." (யாத்திராகமம் 19:5).**

தேவ பிள்ளைகளே! நீங்கள் கூறலாம் அன்று இஸ்ரவேலர் ஆண்டவரோடு கூட உடன்படிக்கையில் இணைந்தார்கள். **நான் அந்த உடன்படிக்கைக்கு கட்டுப்படவில்லையே என்று நீங்கள் நினைக்கக் கூடும்.** ஆயினும் **உங்கள் கரத்திலிருக்கும் வேதாகமத்தின் வார்த்தைகள் உங்கள் தேவனின் உடன்படிக்கையில் இணைந்திருக்கிறது.** அன்று இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு கீழ்படியாது செயல் புரிந்தபடியால் அவர்கள் மீது கோபம் கொண்டார். அவர்கள் மீது தேவனுடைய தண்டனை இறங்கின போது மனம் வருந்தி அவரிடம் திரும்பிய போது தேவன் அவர்களுக்கு மன்னிப்பை அருளினார். இன்றும் பிரதான தேவ வசனத்தில் **சங்கீதம் 149:4**இல் கூறுகிறது **"கர்த்தர் தம்முடைய ஜனத்தின் மேல் பிரியம் வைக்கிறார் சாந்தகுணமுள்ளவர்களை இரட்சிப்பினால் அலங்கரிப்பார்"** என்பதாக. உங்கள் கைகளில் உள்ள உடனபடிக்கையின் வசனத்தை காத்து **அவருக்கு கீழ்படிந்து ஜீவியுங்கள். அப்பொழுது அவர் உங்களை எந்நிலையிருந்தாலும் உங்களை மீட்டுக் கொள்வார். கிருபையின் நாள்!**

ஜெபம்

என் பிதாவானவரே! நீங்கள் உங்களுக்கென்று வேறுபிரித்துக் கொண்டவர்கள் உங்கள் பொருத்தனைகளின் வார்த்தைகளை காத்து உங்களுக்கு முன் கீழ்படிதலோடு வாழ்வதே உங்கள் விருப்பம். தேவனே உமக்கு கீழ்படிந்து வாழ்ந்து இரட்சிப்பின் சந்தோஷத்தை பெற்றுக் கொள்ள தயைபுரியுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"தாழ்மைக்கும் கர்த்தருக்குப் பயப்படுதலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும் மகிமையும் ஜீவனுமாம்." (நீதிமொழிகள் 22:4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஜீவ மன்னா |
|---|
| ஜனவரி |
| 26 வியாழன் |

தேவ வசனத்திற்கு செவி கொடுத்து அதை விசுவாசியுங்கள்!

வேதவாசிப்பு
2 இராஜாக்கள் அதி: 23-24

**"தேவனால் உண்டானவன் தேவனுடைய வசனங்களுக்குச் செவிகொடுக்கிறான்;..."** (பரி.யோவான் 8:47)

தேவ கிருபையை பெற்றுக் கொண்ட தேவ பிள்ளைகளே! இப் புதிய காலைப் பொழுதில் **ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தினால் உங்களை ஆசீர்வதிக்கின்றேன்.** விசுவாசத்தை ஆரம்பித்த ஆண்டவர் முடிவுவரைக்கும் பாதுகாத்து பூரணப்படுத்துவாராக. தேவனாகிய கர்த்தர் கூறுகிறார் **பரி.யோவான் 8:32**இல் **"சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்"** என்று. மறுபடியும் **பரி.யோவான் 8:45**இல் **"நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொல்லுகிறபடியினாலே நீங்கள் என்னை விசுவாசிக்கிறதில்லை"** என்பதாக கூறுகிறார்.

தேவ பிள்ளைகளே! இயேசுகிறிஸ்து தேவனுடைய ஒரே குமாரன் என்பதை நாம் அறிவோம். இயேசுகிறிஸ்து எங்களை நோக்கி கூறுகிறார், **"நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா? நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை. என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்து வருகிறார்." (பரி.யோவான் 14:10).** ஆகையால் அவரது வார்த்தைகளை கேட்பீர்களேயானால் உங்கள் படைப்பின் கர்த்தருடைய வார்த்தைகளையே கேட்கிறவர்களாய் இருக்கிறீர்கள் என பிரதான வார்த்தையில் குறிப்பிடப்பட்டுள்ளது, **"தேவனால் உண்டானவன் தேவனுடைய வசனங்களுக்குச் செவி கொடுக்கிறான்"....** என்று. **"கப்பர் நாகூமிலே ராஜாவின் மனுஷரில் ஒருவனுடைய குமாரன் வியாதியாயிருந்தான். இயேசு யூதாவிலிருந்து கலிலேயாவுக்கு வந்தாரென்று அறிந்த அந்த மனுஷன் அவரிடத்திற்கு போய் தன் மகன் மரண அவஸ்தையாயிருந்தபடியினாலே அவனைக் குணமாக்கும்படிக்கு வரவேண்டுமென்று வேண்டிக் கொண்டான்."**

தேவ பிள்ளைகளே! இயேசுகிறிஸ்து அவனை நோக்கி நீங்கள் அடையாளங்களையும், அற்புதங்களையும் காணாவிட்டால் விசுவாசிக்க மாட்டீர்கள் என்றார். **"அதற்கு மனுஷன் ஆண்டவரே என் பிள்ளை சாகிறதற்கு முன்னே வர வேண்டும் என்றான். இயேசு அவனை நோக்கி நீ போகலாம் உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்றார். அந்த மனுஷன் இயேசு சொன்ன வார்த்தையை விசுவாசித்து போனான். அவன் போகையில் அவனுடைய ஊழியக்காரர் அவனுக்கு எதிர் கொண்டு வந்து உம்முடைய குமாரன் பிழைத்திருக்கிறான் என்று அறிவித்தார்கள்." பரி.யோவான் 4:46-53**வரை நீங்கள் எந்தளவு தேவனுடைய வார்த்தைகளை விசுவாசிக்கிறீர்கள். நீங்கள் தேவனுடைய வார்த்தைகளை விசுவாசிக்கிறவர்களாய் இருந்தால் தேவ வார்த்தைகளில் காணப்படும் வாக்குத்தத்தம் உங்களுக்கு உரித்தாகும் என அறிந்துக் கொள்ளுங்கள். **ஜெயம் தரும் நாள்!**

ஜெபம்

வாக்கு மாறாத என் தேவனே! உம்முடைய வசனத்தைக் கேட்டு அதன்படி விசுவாசித்து நடக்க கிருபையளிக்குமாறும், மேலும் உம்முடைய வாக்குத்தத்தங்களை உரிமையாக்கிக் கொண்டு வாழ எம்மை ஆசீர்வதித்து வழி நடத்தியருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"என் வாசற்படியில் நித்தம் விழித்திருந்து, என் கதவு நிலையருகே காத்திருந்து, எனக்குச் செவிகொடுக்கிற மனுஷன் பாக்கியவான்." (நீதிமொழிகள் 8:34)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜனவரி
27 வெள்ளி

## நீதிமான்கள் கர்த்தருக்குள் மகிழ்ந்திருப்பார்கள்!

வேதவாசிப்பு
2 இராஜாக்கள் 25
1 நாளாகமம் 01

**"நீதிமான் கர்த்தருக்குள் மகிழ்ந்து, அவரை நம்புவான்;..."** (சங்கீதம் 64:10)

அன்பான தேவ பிள்ளைகளே! மனமகிழ்வின் நாட்களை அருளும் ஜீவனுள்ள **இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றும் மனமகிழ்வாய் வாழ உங்களை வாழ்த்துகின்றேன்.** புதிய நாள் ஆரம்பமாகும் பொழுதினில் எம் உள்ளம் ஆனந்தத்தில் நிறைந்திருக்குமாயின் **அன்றைய தினம் முழுவதும் எல்லாக் காரியங்களையும், வேலைகளையும் உற்சாகத்தோடு செய்து முடிக்கவும் மனநிறைவுடன் சந்தோஷத்தோடே நாளை நிறைவு செய்யவும் கூடியதாயிருக்கும்.** அதனால் நீங்கள் இன்று உங்கள் இருதயத்தின் மகிழ்ச்சியோடு நாளை ஆரம்பிக்க முயற்சியுங்கள்.

தேவ பிள்ளைகளே! உங்கள் உள்ளத்தில், ஆறுதல், சமாதானம் இல்லையெனில் மகிழ்ச்சி காணப்படாது. எல்லா மனிதர்களுக்கும் ஏற்படும் பொதுவான காரியமே. விஷேசமாய் இன்றைய எம் பிரதான வேத வசனத்தில் **நீதிமானின் உள்ளம் எப்போதும் மகழ்ச்சியாயிருக்கும்** என்று முக்கியமாக கூறுகிறது. எப்படியெனில் **"நீதிமான் கர்த்தருக்குள் மகிழ்ந்து அவரையே நம்புவான்"**... என்பதாக. கிறிஸ்துவுக்குள்ளாய் ஆண்டவர் **உங்களை நீதிமானாகும்படி அழைத்திருப்பதனால் நீங்கள் கர்த்தருக்குள் மனமகிழ்ச்சியாய் ஜீவிக்கின்றீர்களா?** என அறியும்படியாகவே உலக மாந்தரை பார்க்கிலும் தேவ பிள்ளைகளின் வாழ்விலே அனுதினமும் கஷ்டங்களை சந்திக்க நேரிடுகிறது. ஏனெனில் நாம் ஜீவனுள்ள தேசத்தின் உரிமையாளர்களாய் இருப்பதால் முடிவு பரியந்தம் நாம் நீதிமானகளாய் விளங்க வேண்டும். அதனால்- அந்தகாரங்களின் **உலகின் அதிபதியாகிய சாத்தானுடனும் அவனது சேனைகளுடனும் எமக்கு ஆத்மீக போராட்டம் உண்டு. நாம் யுத்தம் செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறோம்.**

தேவ பிள்ளைகளே! **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக! தேவனாகிய கர்த்தருக்கு நாம் நீதிமனாய் ஜீவிக்க உறுதிக் கொண்டோமனால் எத்தனை இன்னல்கள், பிரச்சினைகள் நேரிட்டாலும் பயப்பட வேண்டிய அவசியமில்லை.** ஏனெனில் சகலவற்றிலும் ஜெயம் பெற்றுத் தர ஜெயக்கிறிஸ்து எம்மோடிருக்கிறார். **நீங்கள் தேவனையே விசுவாசிக்கும் போது எதைக் குறித்தும் கவலையடையவோ, உங்களுக்கு விரோதமாய் எவ்வகையான உபத்திரவங்கள் ஏற்படினும் உங்கள் உள்ளம் கலக்கமடையவோ, உங்கள் இருதயம் அதைரியப்பட வேண்டிய அவசியமில்லை.** தேவன் மீது நீங்கள் கொண்டுள்ள விசுவாசம் உங்கள் உள்ளத்தை உறுதிப்படுத்தும். **உங்கள் இருதயம் தேவனுக்கு முன்பாய் கறைதிரையற்ற உள்ளமாய் இருக்கக்கடவது. அப்படியிருந்தால் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து எந்நேரமும் உங்களை வழி நடத்தி, ஆலோசனைகளை அளித்து முன்னோக்கி கொண்டு செல்வார். உங்கள் உள்ளத்தின் மகிழ்ச்சிக்கு எந்தவித குறைவும் ஏற்படாது காத்துக் கொள்வார். மகிழ்ச்சிகரமான நாள்!**

ஜெபம்

அன்பின் பிதாவே! கிறிஸ்துவுக்குள் எம்மை நீதிமான்களாக்கி அழைத்துக் கொண்டபடியால் நன்றி! தகப்பனே! எப்போதும் உங்கள் மீது விசுவாசம் கொண்டு உங்களில் மகிழ்ச்சியாய் வாழ எனக்கு ஒத்தாசை புரிந்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"நீதிமானுடைய சிரசின்மேல் ஆசீர்வாதங்கள் தங்கும்; கொடுமையோ துன்மார்க்கனுடைய வாயை அடைக்கும்." (நீதிமொழிகள் 10:6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜனவரி

28 சனி

# உலகின் கடைசி கால அடையாளங்கள்!

வேதவாசிப்பு

1 நாளாகமம் அதி: 02-03

**"அது முந்தின மிருகத்தின் அதிகாரம் முழுவதையும் அதின் முன்பாக நடப்பித்து, சாவுக்கேதுவான காயம் ஆறச்சொஸ்தமடைந்த முந்தின மிருகத்தைப் பூமியும் அதின் குடிகளும் வணங்கும்படி செய்தது."** (வெளிப்படுத்தல் 13:17)

பிரியமான தேவ பிள்ளைகளே! மரித்து உயிர்த்து சதாகாலங்களிலும் ஜீவனுள்ளவரான தேவனாகிய **கர்த்தருடைய நாமத்தினால் கிருபை பெற்று கர்த்தரிலே நிலைத்திருக்கும்படியாக வாழ்த்துகின்றேன்.** பரலோக இராஜ்யத்தின் உரிமையாளராக திகழும் வரப்பிரசாதத்தை பெற்ற நீங்கள் ஒவ்வொருவரும் புவியில் எல்லா மனிதர்களை பார்க்கிலும் **பாக்கியவான்கள்**! ஆகையால் **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக**!

தேவ பிள்ளைகளே! உலகின் கடைசி காலங்களைக் குறித்து பரிசுத்த வேதாகமம் அநேக இடங்களில் வெளிப்படுத்தியுள்ளது. ஆயினும் நீங்கள் எவ்வளவாய் இதை விசுவாசிக்கிறவர்களாய் இருக்கிறீர்கள் இயேசுகிறிஸ்து "**ஒலிவ மலையின் மேல் அமர்ந்திருக்கையில் சீஷர்கள் அவரிடத்தில் தனித்து வந்து இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும் உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்ல வேண்டும்**" என்றார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்றும் **பரி.மத்தேயு 24:21**இல் "**ஏனெனில் உலகமுண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும் இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும் என்பதாக**" கூறினார். தேவ பிள்ளைகளே! இன்றைய எம் பிரதான வேத வசனம் வெளிப்படுத்துவது **666யை குறித்ததாகும். இது மிருகத்தின் நாமம் அல்லது நாமத்தின் இலக்கம் 666 மனுஷனுடைய அதாவது பெரியோர், சிறியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீன அடிமைகள் இவர்கள் யாவரும் தங்கள் வலது கையிலாவது, நெற்றியிலாவது ஒரு முத்திரையை தரித்துக் கொள்ள வேண்டும்** என்றும், முத்திரையை தரித்துக் கொள்கிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும், விற்கவும் கூடாது எனவும் கூறப்பட்டுள்ளது. **வெளிப்படுத்தல் 13:16,17,18** இதை காணலாம்.

தேவ பிள்ளைகளே! "**மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்கித் தன் நெற்றியிலாவது தன் கையிலாவது அதின் முத்திரையைத் தரித்துக் கொள்கிறவன் எவனோ அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் அக்கினியினாலும், கந்தகத்தினாலும் எழும்பும் மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்குவர்களுக்கும் அதனுடைய நாமத்தின் முத்திரையைத் தரித்துக் கொள்ளுகிற எவனுக்கும் இரவும், பகலும் இளைப்பாறுதலிராது**" என்று **வெளிப்படுத்தல் 14:9,11**இல் கூறுகிறது. ஆயத்தப்படுங்கள் சதாகால அக்கினிக்கு அல்ல சதாகால நித்திய ஜீவனுக்கு உரியவர்களாக தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களே, இவைகளைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். நவீன சாதனங்களின் மூலம் நவீன கண்டு பிடிப்புகளை விரும்பி மிக இலகுவான வழிகளை பின் தொடர்ந்துச் செல்பவர்கள் கவனமாயிருங்கள். **வெற்றியின் நாள்**!

ஜெபம்

பரிசுத்தமுள்ள பிதாவே! உலக முடிவினைக் குறித்து நான் அறிந்திருக்கிறேன். நான் அறியாத அநேக காரியங்களை இன்று எனக்கு வெளிப்படுத்தியபடியால் நன்றி! என் தேவனே நித்திய அக்கினியிலிருந்து விடுதலை பெறும்படியாக என் ஆத்துமாவைக் காத்துக் கொள்ள எனக்கு கிருபை அளிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்.

~ஆமென்~

இயேசு வாக்குத்தத்தம்

"...உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்." (பரி.மத்தேயு 28:20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜனவரி

29 ஞாயிறு

ஆத்மீக போராட்டத்தில் ஜெயிக்க கற்றுக் கொள்ளுங்கள்!

வேதவாசிப்பு

1 நாளாகமம் அதி: 04-05

**"ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு."** (எபேசியர் 6:12)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் கர்த்தருடைய முகத்தை தரிசிக்க அழைக்கப்பட்டவர்களாகிய உங்கள் வாழ்க்கையில் இன்றும் அவர் சித்தம் நிறைவேற வாழ்த்துகின்றேன்.** பரலோக தேவனானவர் அவரது சிருஷ்டிப்புகள் யாவிலும் மனிதனை மிக உயர்ந்த பொக்கிஷமாகவே எண்ணுகிறார். **விஷேசித்த விதமாய் மனிதர்கள் மத்தியிலிருந்து தமக்கென்று தெரிந்துக் கொள்கிறவர்களைக் குறித்து அவரது கரிசனை அதிக பட்சமாயிருக்கின்றது.**

தேவனுடைய பிள்ளைகளே! **அவருக்குரியவர்களை சுக நலத்துடன் வாழச் செய்யவும், வாழ்வின் சகல தேவைகளும் ஏற்ற காலங்களில் நிறைவேறச் செய்து மகிழ்ச்சியாய் காணப்படும்படியாக செயலாற்றுகிறார்.** அதுமாத்திரமல்ல தூய ஆவியானவருக்கூடாக தேவையான அறிவுறுத்தல்களையும், ஆலோசனைகளையும் அளித்து நித்திய இராஜ்யத்தில் அவர்கள் பிரவேசிக்கும் நாள் வரையிலும் மிக அவதானத்துடன் முன்னோக்கி நடத்துகிறார். ஆகையால் **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!** இன்றைய முதல் வேத வசனத்தில் **எபேசியர் 6:12**இல் கூறுகிறது. தேவ பிள்ளைகளாகிய எமக்கிருக்கும் போராட்டங்களை குறித்தாகும். "**அது மாம்சத்துக்குரிய போராட்டம் அல்ல என்றும் ஆத்துமாவுக்குரிய போராட்டம் என்றும் விஷேசமாய் அறிவிக்கப்பட்டுள்ளது.**"

தேவ பிள்ளைகளே! ஆகையால் **உங்கள் ஆத்துமாவில் உண்டாகும் போராட்டத்திலே வெற்றியை பெற நீங்கள் பெலனடைய வேண்டும். ஆகையால் நீங்கள் இப் போராட்டத்தில் ஜெயம் பெறத்தக்கதாய் ஆத்துமாவின் பெருக்கத்திற்குரிய செயல்களின் இடைபடுங்கள். உங்கள் அனுதின ஜெபங்களை இடைவிடாமல் தொடருங்கள். தேவபாதத்தில் தனிமையில் அமர்ந்து ஜெபியுங்கள்.** வேத வசனங்களை வாசித்தறிந்து தியானித்து வாழ்விலே செயல்படுத்துங்கள். இன்னும் ஆத்துமாவில் வளர்ச்சியடைந்து பெலப்படக்கூடிய செயல்களில் ஈடுபடுங்கள். "**விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன என் நாமத்தினால் பிசாசுகளை துரத்துவார்கள்**" என்று **பரி.மாற்கு 16:17**இல் கூறுகிறது. ஆகையால் "**தேவனுக்கு கீழ்ப்படிந்திருங்கள் பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் அப்பொழுது உங்களை விட்டு ஓடிப் போவான்**" என **யாக்கோபு 4:7**இல் எழுதப்பட்டிருக்கிறது. அதனால் ஜெபத்தில் உங்கள் ஆத்துமாவை பெலனடையச் செய்து ஆத்மீக போராட்டத்தில் வெற்றியை பெற்றுக் கொள்ளுங்கள். **ஜெயத்தின் நாள்!**

ஜெபம்

பரலோக தேவனே! ஆத்மீகர்களுக்கு போராட்டம் உண்டென்றும், ஆத்துமாவை பெலனடையச் செய்து ஜெயம் பெற முடியும் என்று அறியத்தந்தமையால் நன்றி! இன்றும் எம் ஆத்துமாவை பெலப்படுத்தி போராட்டத்தில் வெற்றியை பெற அநுக்கிரகம் அளிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். -ஆமென்-

வேத வாக்குத்தத்தம்

"பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள், நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம்." (1 கொரிந்தியர் 9:25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜனவரி

30 திங்கள்

சாத்தானுக்கு
எதிர்த்து
நில்லுங்கள்!

வேதவாசிப்பு

1 நாளாகமம்
அதி: 06-07

**"அவர்கள் அந்தக் கொம்புகளினால் நெடுந்தொனி இடும்போதும், நீங்கள் எக்காளச்சத்தத்தைக் கேட்கும்போதும், ஜனங்கள் எல்லாரும் மகா ஆரவாரத்தோடே ஆர்ப்பரிக்கக்கடவர்கள்; அப்பொழுது பட்டணத்தின் அலங்கம் இடிந்துவிழும்;..."**
(யோசுவா 6:5)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவனுள்ள தேவன் **இயேசுகிறிஸ்துவின் இணையற்ற நாமத்தினால் இன்றும் உங்களுக்கு வெற்றியுடன் கூடிய நல்ல நாளாக அமைய வாழ்த்துகின்றேன்.** எங்கள் தேவனாகிய கர்த்தர் பராக்கிரமும், அதி பரிசுத்தமும் யோசனையிலே பெரியவரும், செயலிலே வல்லவருமாயிருக்கிறார். **தேவனுக்கு ஒப்பானவர் உலகிலே எவரும் இல்லையென நான் விசுவாசிக்கிறேன் நீங்களும் விசுவாசிக்கிறீர்களா?**

தேவ பிள்ளைகளே! பிரதான வசனத்தில் **யோசுவா 6:5**இல் எழுதப்பட்டிருக்கிறது. **"யோசுவாவிற்கு இஸ்ரவேல் ஜனங்களுடன் இணைந்து எரிக்கோ நகரை எப்படி கைப்பற்றுவது என கர்த்தர் கொடுத்த ஆலோசனையின் ஒரு பகுதியாகும். அவரது வார்த்தைகளின்படி ஆசாரியர்கள், யுத்தசன்னத்தார்கள், இஸ்ரவேல் புத்திரர்கள், ஜனங்கள் ஆகியோர்களுடன் யோசுவா செயல் புரிந்தார்."** கர்த்தர் கூறியபடி அலங்கம் இடிந்து விழுந்தது யோசுவாவோடே ஜனங்கள் பட்டணத்தில் ஏறினார்கள். பட்டணம் பிடிக்கப்பட்டது. **யோசுவா 6:20**இல் எழுதப்பட்டிருக்கிறது. **"எக்காளங்களை ஊதுகையில் ஜனங்கள் ஆர்ப்பரித்தார்கள். எக்காள சத்தத்தைக் கேட்டு ஜனங்கள் கேட்டு மகா ஆரவாரத்தோடே முழங்குகையில் அலங்கம் இடிந்து விழுந்தது."** உடனே ஜனங்கள் அவரவர் தங்களுக்குக் நேராகப் பட்டணத்தில் ஏறி பட்டணத்தை பிடித்தார்கள் என்பதாக.

தேவ பிள்ளைகளே! எம் சனிக்கிழமை அற்புத சுகமளிக்கும் தேவ ஆராதனையில் ஆரம்ப வேளையிலே இந்த ஜீவ வார்த்தையான **யோசுவா 6:5யை** வாசித்து எக்காளத்தை ஊதி ஆரம்பிக்கின்றோம். தேவ பிள்ளைகளே! அன்று எரிக்கோ மதில்கள் என்ற எதிரிகளுடைய பலத்த கோட்டையை இடித்து அதாவது **மதிலை தகர்த்தது போல தற்போது நாம் செய்வது எங்கள் வாழ்க்கைக்கு விரோதமாக கிரியை செய்யும் சாத்தானுடைய கோட்டை எனும் மதிலை இடித்து விழத்தள்ளவேயாகும்.** இப்படி நாம் செய்யும் போது மனிதர்களுடைய சரீரங்களில் நுழைந்து வாழ்வினை சீர்குலைத்து நாசம் செய்யும் **அந்தகார வல்லமைகள் மனித வாழ்க்கையில் தோல்வி, வெறுப்பு, கசப்புகளை உண்டு பண்ணுகிற தீயசக்திகள் என்பவைகள். சரீரங்களிலிருந்து மறைந்திருக்க முடியாதபடி சத்தமிட்டு, அலைக்கழிக்கப்படுவதை சனிக்கிழமைகளில் நாம் காண்கிறோம்.** தேவனை விசுவாசித்து அவரது வார்த்தைகளின்படி நாம் செயல்படும் போது அவருடைய வார்த்தைகள் கிரியை செய்கிறது. **நேற்றைய தினம் நீங்கள் வாசித்த தேவ வார்த்தையின்படி உங்கள் போராட்டங்களிலிருந்து வெற்றி பெற ஆத்துமாவில் பெலனடைந்து சாத்தானை எதிர்த்து நில்லுங்கள்.** அப்போது **சாத்தான் தோல்வியடைந்து உங்களை விட்டு ஓடிப் போவான். வெற்றிச் சிறந்த நாள்!**

ஜெபம்

பரலோகப் பிதாவே! உங்கள் தேவ ஆவியால் நிரப்பி என் ஆத்மீக ஜீவியத்துக்கு விரோதமாய் செயல்படும் சாத்தானுக்கு எதிர்த்து நின்று அவனது கோட்டையை மதிலை தகர்த்து விட எனக்கு ஒத்தாசை புரியுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்.
-ஆமென்-

வேத வாக்குத்தத்தம்

"இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது."
(பரி.லூக்கா 10:19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜனவரி
**31** செவ்வாய்

## இஸ்ரவேலின் தேவனே உங்கள் பிராணனின் அதிபதி!

வேதவாசிப்பு
1 நாளாகமம்
அதி: 08-09

**"இதோ, நான் யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவை, அவனுடைய சத்துருவும் அவன் பிராணனை வாங்கத் தேடினவனுமாகிய நேபுகாத்நேச்சார் என்னும் பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுத்ததுபோல, ........, அவன் பிராணனை வாங்கத்தேடுகிறவர்களின் கையிலும் ஒப்புக்கொடுப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்."** (எரேமியா 44:30)

தேவனுக்குள் பிரியமானவர்களே! **ஜீவனுள்ள தேவனாகிய இயேசுகிறிஸ்து இன்றும் உங்களுக்கு சுகபெலன் தந்து ஆசீர்வதித்திருக்கிறார். இன்றைய நாளிலும் நீங்கள் பூரண சுகத்தோடு வாழ வேண்டுமென வாழ்த்துகின்றேன்.** புதிய வருடத்தின் நாட்கள் கடந்து ஒரு மாதமும் பூரணமாகும் இத்தினத்திலே மகிழ்ச்சியுடன் நாட்களை வழி நடத்திய **தேவனுக்கே கோடான கோடி ஸ்தோத்திரங்களை ஏறெடுப்போம்.** உங்கள் பிராணனை காக்கும் தேவனானவர் இன்றும் உங்களோடிருக்கிறபடியால் வியாதியினாலோ மனிதர்களினாலோ, சத்துருவினாலோ உங்களுக்கு எந்தவித உயிர்ச் சேதமும் ஏற்படாது. ஆகையால் **பயப்படாதிருங்கள்**!

தேவ பிள்ளைகளே! **உலகில் பிறந்த எந்த மனிதனாலும் மரணத்திலிருந்து தப்ப முடியாது.** மனிதர்கள் யாவருக்கும் மரணம் என்பது பொதுவான விதியாகும். ஆகையால் அதற்கு நாமும் ஒரு நாள் முகம் கொடுக்க வேண்டும். இது எப்படி, எப்போது நடக்குமென்று எம்மால் அறிந்துக் கொள்ள முடியாது. ஆயினும் **உலக மனிதர்களுக்கென பரலோக தேவன்**! **எம் சிருஷ்டிகரால் நியமிக்கப்பட்ட ஆயுள் நாட்களில் வாழ்ந்து முடிந்த பின் மரணமடைய வேண்டும்.** ஆனால் எத்தனையோ மனிதர்கள் அற்ப ஆயுசில் மரணமடைகிறார்கள். அகால மரணங்கள் நேரிடுகிறது. ஆயினும் எம் பிராணனின் அதிபதியாகிய பரலோக தேவனாகிய படைப்பின் தேவ பிதாவைக் குறித்து அறிந்தவர்களாய் அவரையே விசுவாசித்து அவரால் தெரிந்துக் கொள்ளப்பட்ட தேவ பிள்ளைகளாய் அவரில் பரிசுத்தமாய் ஜீவிப்பவர்கள் யாரும் அகால மரணத்தை தழுவிக் கொள்ள மாட்டார்கள். அவர்களுடைய ஜீவனுக்கு தீங்கு நேரிடாது. பரிசுத்த வேதாகமத்தில் **எசேக்கியேல் 18:4**இல் தேவன் கூறுகிறார் "**இதோ எல்லா ஆத்துமாக்களும் என்னுடையவைகள், தகப்பனின் ஆத்துமா எப்படியோ அப்படியே மகனின் ஆத்துமாவும் என்னுடையது. பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்**" என்பதாக.

தேவ பிள்ளைகளே! இன்று எரேமியா தீர்க்கத்தரிசிக்கூடாய் இயேசுகிறிஸ்து கூறுகிறார் "**எம் எதிரிகளின் கரங்களிலும், எம் பிராணனை அழிக்க தேடுகிறவர்களின் கையிலும் எம் பிராணனை ஒப்புக் கொடுக்க முடியும்**" என்பதாக. யூதாவின் ஜனங்களுக்கு தேவன் இப்படி கூறியது, அவர்கள் கர்த்தருடைய குரலுக்கு கீழ்படியாது அநேக பொல்லாப்புகளை செய்தபடியால் அவர்கள் தேவன் தண்டனைக்குட்படுத்துவேன் என்பதற்கு அடையாளமாகவே. ஆனால் **நீங்கள் கர்த்தருடைய குரலுக்கு கீழ்படிந்து செயல்பட்டால் உங்கள் விரோதிகளுக்கு அவர் விரோதியாய் நிற்பார்.** உங்கள் பிராணனை அழிப்பதற்கு இடமளிக்கமாட்டார். **உங்களை கண்ணின்மணியைப் போல பாதுகாப்பார். ஜெயம் தரும் நாள்**!

ஜெபம்

என் தேவனே! நான் உங்களது உரிமையுள்ள சொந்தப் பிள்ளையாக இருப்பதால் நன்றி! என் எதிரிகளிடமிருந்தும் எதிராளியான பிசாசின் தந்திரங்களிலிருந்தும் வெற்றி பெற உமக்கு கீழ்படிந்து நடக்க கிருபையளிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"உங்கள்முன் ஒருவரும் எதிர்த்து நிற்பதில்லை; உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சொன்னபடி உங்களால் உண்டாகும் பயமும் கெடியும் நீங்கள் மிதிக்கும் பூமியின்மேலெல்லாம் வரப்பண்ணுவார்."
(உபாகமம் 11:25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பரிசுத்த வேதாகமத்தில் உபாகமம் 28:12இல் 'ஏற்ற காலத்தில் உன் தேசத்திலே மழை பெய்யவும் நீ கையிட்டுச் செய்யும் வேலைகளையெல்லாம் ஆசீர்வதிக்கவும், கர்த்தர் உனக்குத் தமது நல்ல பொக்கிஷசாலையாகிய வானத்தைத் திறப்பார். நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன் கொடுப்பாய் நீயோ கடன் வாங்காதிருப்பாய்' என்றாகும். தேசத்தை வளம் பெறச் செய்விக்கும் தேவ பிதாவானவரின் சொந்த பிள்ளைகளான எங்கள் வாழ்வை செழிப்பறச் செய்வது ஏன் என நீங்கள் நினைக்கிறீர்களா? அப்படியானால் எமது வாழ்வு வளம் பெறாதா?



ஏசாயா 58:11இல் 'கர்த்தர் நீ நீர்ப்பபாய்ச்சலான தோட்டத்தைப் போலவும், வற்றாத நீரூற்றைப் போலவும் இருப்பாய்' என வாக்களித்திருப்பதால் நீங்கள் வருஷம் முழுவதும் செழிப்புடன் வாழ்வீர்கள் என்பதை விசுவாசியுங்கள்.

இன்னுமான 03 யோவன் 2வது வசனத்தில் 'பிரியமானவர்களே உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்' என்றெழுதப்பட்டுள்ளது. ஆகையால் இப்பூமியில் பெறுகின்ற ஆசீர்வாதங்களைப் போன்றே எமது ஆத்துமாவிலும் செழிப்புற்றிருப்பதே தேவ பிள்ளைகளான நாம் அனைவரும் பெறும் உண்மையான ஆசீர்வாதமாகும்.



ஆகையால் முதன் முதலாக உங்கள் உள்ளத்தைத் நீங்கள் ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள். எங்கள் தேவனின் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேக மழையை உங்கள் உள்ளத்தில் பொழியச் செய்து உங்கள் ஆத்துமாவைப் போசித்து அளவற்ற ஆசீர்வாதங்களினால் நிரப்புவார். தேவனுக்குள் உங்கள் ஆத்துமா சுகமாய் செழிப்பாக வாழுமெனின் உங்கள் வாழ்க்கை சம்பந்தமான சகல காரியங்களும் ஆசீர்வதிக்கப்படும். ஏனென்றால் ஆத்மீக காரியங்களைத் தேடி நீங்கள் பின் தொடருகின்ற போது பூமிக்குரிய ஆசீர்வாதங்கள் உங்களைத் தொடரும்.



ஆகையால் அன்பார்ந்த தேவ பிள்ளைகளே பிறந்த 2017 புதிய வருடத்தில் உங்கள் வாழ்வில் காணப்படும் வேதனை கண்ணீர், பிரச்சினைகள் என்பவற்றில் விடுதலை பெற்று உங்களை எதிர் நோக்கும் சவால்களில் வெற்றி பெற்று தேவன் சமாதானத்துடனும், சந்தோஷத்துடனும் வாழ ஆசீர்வதிப்பாராக! என ஜீவிக்கிற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் நாம் பிரார்த்திக்கின்றோம். கர்த்தர் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக!

**கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!**

**போதகர் ஏ.ஜே.ஜோசப்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசு கைவிடார் திருச்சபைக்கு செல்லும் வீதியின் வரைபடம்.




1. புதிய தேவ சபை
2. பழைய தேவ சபை
3. களனி மின்சார நிலையம்
4. கோவில்
5. விஹாரை
6. 505 கராஜ்

## எங்களுடைய கணனி ஒளிபரப்பில் தொடர்பு கொள்வதற்கு...

Apple லும் Android கையடக்க தொலை பேசியின் மூலமும் டெப் வழியாகவும் Play store கிளிக் செய்து jesusnf என Type செய்து JNF ஐ கிளிக் செய்யுங்கள்

Google.com » ustream.tv » jesusnf » jesusnf (click)

## இடைவிடாமல் உங்கள் ஜீவ மன்னா தின மஞ்சரியை பெற்றுக் கொள்ள வாசகக் கட்டணங்கள், காணிக்கைகள், சந்தோஷ காணிக்கைகளை எமக்கு தவறாது அனுப்பி வையுங்கள்!

**பணம் அனுப்ப**

கிராண்டபாஸ் தபால் காரியாலயம்
போதகர் ஏ.ஜே.ஜோசப்
என்னும் பெயருக்கு அனுப்புங்கள்.

**பணம் வைப்பிலிட**

போதகர் ஏ.ஜே.ஜோசப்
கணக்கு இலக்கம் 8076982701
கொமர்ஷல் வங்கி,
கிராண்ட்பாஸ் கிளை
பணத்தை வைப்பிலிட்டு
பற்று சீட்டை எமக்கு அனுப்பவும்



போதகர் ஏ.ஜே.ஜோசப்

ஜீவ மன்னா தின தியான புத்தகத்தை தபால் மூலம் ஒவ்வொரு மாதமும் பெற்றுக் கொள்ளலாம்.
விலாசத்தை அனுப்பவும் R/N: QD/57/NEWS/2016


## இயேசு கைவிடார் சுவிசேஷ பணியகம்

இல:60/5, புதிய களனி பாலம் வீதி, ஒருகொடவத்த, வெல்லம்பிடிய. (பழைய டொயொடா நிறுவனக் கட்டிடம்).
011-2437189 011-2334865 071-4922929
arulandu.joseph@gmail.com www.jesusnf.org



இல:60/5, புதிய களனி பாலம் வீதி, ஒருகொடவத்த, வெல்லம்பிடிய ஜீவ மன்னா குட் நியூஸ் பிரிண்டர்ஸ் அச்சகம் மூலம் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org